# ஒரு நதி
# ஒரு பௌர்ணமி
# ஒரு பெண்

## - ராஜேஷ்குமார்

## 1

கதிரவன் இன்னமும் கண் திறக்காத காலை வேளை.

விவேக் வாக்கிங் புறப்பட்டுப் போவதற்காக கால்களுக்கு கான்வாஸ் ஷூக்களை மாட்டிக் கொண்டிருக்க - ரூபலா சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்தாள்.

"என்னங்க...."

"சொல்லு ரூபி...

"இன்னிக்கு வாக்கிங்கை முடிச்சுகிட்டு கொஞ்சம் சீக்கிரமாவே வந்துடுங்க..."

"என்ன விஷயம்...?"

"நாம ஒரு கல்யாணத்துக்கு [illegible] வேண்டியிருக்கு. எனக்கு தூரத்து சொந்த. உங்களையும் கூட்டிகிட்டு வர்றதா சொல்லிட்டேன்...

"முகூர்த்தம் எத்தனை மணிக்கு..?"

"ஏழு மணிக்கு..."

"சான்ஸே இல்லை... ஏழு மணிக்கு நான் டி.ஜி.பி. மௌரியாவுக்கு முன்னாடி இருந்தாகணும்... அவர் நேத்திக்கே போன் பண்ணி வரச் சொல்லியிருக்கார்."

"டி.ஜி.பி. மௌரியா உங்களை வரச்சொல்லியிருக்காரா...?"

"ம்..."

"எதுக்கு...?"

"அவர்க்கு முன்னாடி போய் உட்கார்ந்த பின்னாடிதான் தெரியும்." விவேக் கான்வாஸ் ஷூக்களை மாட்டிக்கொண்டு எழுந்தான். "எனக்கு ஹெர்பல் டீ ரெடியா?"

"வந்துகிட்டேயிருக்கு... ஒரு ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணுங்க."

"இந்நேரத்துக்கு என்னோட கையில் டீ இருக்க வேண்டாமோ...? அந்த விஷ்ணு வேற இன்னியிலிருந்து நானும் உங்ககூட வாக்கிங் வர்றேன் பாஸ்ன்னு சொல்லியிருக்கான்."

"அவனை உங்ககூட கூட்டிகிட்டு போகாதீங்க..."

"ஏன்...?"

"அந்த விஷ்ணு உங்ககூட வாக்கிங் வர்றது

எதுக்காகத் தெரியுமா?"

"எதுக்காக...?"

"அரை ட்ராயரிலும் பனியனிலும் வாக்கிங் வர்ற பொண்ணுகளைப் பார்த்து ஜொள்ளு விடறதுக்குத்தான்..."

"சேச்சே...! அவன் அப்படிப்பட்டவன் இல்லை..."

"நீங்க ஒண்ணும் சர்டிபிகேட் தரவேண்டாம்... அந்த விஷ்ணு ஒரு சரியான மிஸ்டர் பொ...பொ..."

"மிஸ்டர் பொ... பொ... வா...? அப்படீன்னா...?"

"அவன்கிட்டயே கேளுங்க... சொல்லுவான்...!"

"உன்னோட அளவுக்கு அவனுக்கு ஜெனரல் நாலேட்ஜ் கிடையாது. நீயே சொல்லிடு ரூபி..."

வாசலில் காலிங் பெல் சத்தம் கேட்டது. ரூபலா சொன்னாள். "அந்த பொ... பொ... தான்...! போய்க் கதவைத் திறங்க."

விவேக் கான்வாஸ் ஷூக்களை மாட்டிக்கொண்டு எழுந்தான். போய்க் கதவைத் திறந்தான்.

வெளியே - விஷ்ணு.

"குட்மார்னிங் பாஸ்...!"

"வாடா...!"

விஷ்ணு உள்ளே நுழைய விவேக் அவனை வியப்பாய்ப் பார்த்தான்.

"என்ன பாஸ்... அப்படிப் பார்க்கறீங்க...?"

"என்னடா இது...?! ஏதோ கல்யாணத்துக்கு போற மாதிரி ட்ரஸ் பண்ணிட்டு வந்திருக்கே... புது



சர்ட்... புது பேண்ட். மூஞ்சிக்கு பௌ போட்டிருக்கே... பாடி ஸ்ப்ரே பண்ணியிருக்கே. செண்ட் வாசம் தூக்குது...! நீ வாக்கிங்குக்கு வர்ற லட்சணமா இது...?"

விஷ்ணு உள்ளே வந்து நாற்காலிக்கு சாய்ந்தான். "ஏன் பாஸ்... கொஞ்சம் சுத்தமா... நீட்டா வாக்கிங் போகலாம்னு நினைச்சேன்... அது தப்பா...?"

ரூபலா சமையலறையிலிருந்து ஹெர்பல் டீயோடு வெளிப்பட்டாள். விஷ்ணு சிரித்தான்.

"குட்மார்னிங் மேடம்...!"

"குட்மார்னிங் மிஸ்டர் பொ... பொ..."

"எனக்கும் டீ கிடைக்குமா மேடம்...?"

"நீ டீயைகூட கண்ணால பார்த்து ஒரு வருஷம் இருக்குமா...?"

"ஒன்றரை வருஷம் மேடம்..."

ரூபலா, விஷ்ணுவை முறைத்துவிட்டு சமையலறைக்குள் போக, விவேக் கேட்டான்.

"டேய் விஷ்ணு...! அதென்ன மிஸ்டர் பொ... பொ...? ரூபலா உனக்கு 'குட்மார்னிங் பொ... பொ...'ன்னு சொன்னப்பகூட அப்படீன்னா என்னான்னு நீ கேட்கலையே...? "

"மேடம் எனக்கு வெச்சிருக்கிற செல்லப்பேர் 'பொ.பொ'ன்னு எனக்குத் தெரியும் பாஸ்..."

"அப்படியா...? சரி... 'பொ.பொ'ன்னா என்ன அர்த்தம்...?"

"அது வந்து பாஸ்..."

"சொல்லுடா...!"

"பொம்பளைப் பொறுக்கி பாஸ்..."

விவேக் 'அட!' என்று திகைக்க, விஷ்ணு சிரித்தான். "இந்த மிஸ்டர் பொ.பொ. பட்டத்தை ரொம்ப நாளைக்கு முன்னாடியே மேடம் எனக்குக் கொடுத்துட்டாங்க பாஸ்! பட்டம் கொஞ்சம் கௌரவா இருக்கணும்ங்கிறதுக்காக மிஸ்டர் போட்டு கூப்பிடுவாங்க... உங்களுக்கு தெரியாதா பாஸ்...?"

"இப்படியொரு பட்டமளிப்பு விழா நடந்தது இன்னிக்குத்தான் எனக்குத் தெரியும்..."

ரூபலா இரண்டு கப்புகளில் டீயைக் கொண்டு வந்து வைக்க - விஷ்ணு தன் இரண்டு கைகளாலும் அவைகளை எடுத்துக்கொண்டு "தேங்க்யூ மேடம்..." என்றான். மாறி மாறி டீயை உறிஞ்சியவன் காலி கோப்பைகளைக் கீழே வைத்துவிட்டு எழுந்தான்.

அப்போது... வாசலில் காலிங் பெல் மறுபடியும் கூப்பிட்டது. விவேக் ஒரு சின்ன திகைப்போடு ரூபலாவைப் பார்த்தான்.

"இந்நேரத்துக்கு யார்...?"

ரூபலா கதவை நோக்கி நடக்க முயல, விவேக் அவளை கையமர்த்தினான்.

"ரூபி...! நீ இரு... நான் போய்ப் பார்க்கிறேன்..."

விவேக் வாசல் கதவை நோக்கிப் போய் தாழ்ப்பாளை விலக்கினான்.



வெளியே... போர்டிகோ படிகளில் - கையில் ஒரு ப்ரீப் கேஸோடு அந்த ஐம்பது வயது டி.ஜி.பி. மௌரியா ஜாக்கிங் சூட்டோடு தெரிந்தார். விவேக் அதிர்ந்து போய் அட்டென்ஷனுக்கு வந்து நெற்றிக்கு வலது கை விரல்களைக் கொண்டு போனான். பிறகு தளர்ந்தான்.

"குட்மார்னிங் ஸார்..."

"குட்மார்னிங் மிஸ்டர் விவேக்... இந்தக் காலை நேரத்தில் உங்களுக்கு தொந்தரவு கொடுத்துட்டேனா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை ஸார்... ப்ளீஸ் கம்இன் ஸார்..."

மௌரியா உள்ளே வந்தார். விஷ்ணு விழிகள் விரிய தடாலடியாய் அட்டென்ஷனுக்கு வந்து சல்யூட் வைத்தான். அவனுடைய சல்யூட்டை புன்னகையால் ஏற்றுக்கொண்ட மௌரியா கேட்டார் :

"நீ க்யூ ப்ராஞ்ச் விஷ்ணுதானே...?"

"எஸ்... ஸார்..."

"உன்னோட ஃபைலைப் பார்த்தேன். நல்ல பெர்பாமென்ஸ், கீப்இட் அப்..."

"தேங்க்யூ... ஸார்..."

பக்கவாட்டிலிருந்து ரூபலாவின் "வணக்கம் ஸார்!" குரல் கேட்டு மௌரியா திரும்பிப் பார்த்து மலர்ந்தார்.

"எப்படீம்மா இருக்கே...?"

"ஃபைல் ஸார்."

"எனக்கு சூடா அரை டம்ளர் காப்பி வேணும். கிடைக்குமா...?"

"இதோ...!" ரூபலா சமையலறையை நோக்கி வேகவேகமாய் போக, மௌரியா விவேக்கிடம் திரும்பினார்.

"விவேக்! உங்களுடைய பர்சனல் ரூம் எது?"

"மாடியில் இருக்கு ஸார்..."

"வாங்க போலாம்! உங்ககிட்ட ஒரு மணி நேரம் பேச வேண்டியிருக்கு. உங்களை ஏழு மணிக்கு என்னோட ஆபீசுக்கு வரச்சொல்லியிருந்தேன். பட் உங்களை நான் சந்திச்சுப் பேசறது ஆபீஸில் இருக்கக்கூடிய யாருக்கும் தெரியக்கூடாதுன்னுதான் இந்த வாக்கிங் போகிற நேரத்தில் நானே உங்க வீட்டுக்கு வந்துட்டேன். திஸ் இஸ் ஹைலி கான்ஃபிடென்ஷியல்..."

"வாங்க ஸார்... மாடிக்குப் போலாம்."

விவேக்கைப் பின்தொடர்ந்து நடந்த மௌரியா விஷ்ணுவுக்கு கண்ணசைத்தார். "நீயும்... வா..."

"எஸ்... ஸார்..."

விவேக் மௌரியாவை உள்ளே அழைத்துச் சென்று சோபாவைக் காட்டி, "ப்ளீஸ் ஸார்..." என்று சொல்ல, அவர் உட்கார்ந்தார்.

மௌரியா தன் கையோடு கொண்டு போயிருந்த ப்ரீப் கேஸைப் பிரித்தார். உள்ளேயிருந்து ஒரு ஃபைலை எடுத்தார். அதை



நீட்டியபடியே சொன்னார் : "மிஸ்டர் விவேக்... இது ஒரு கேஸ் ஃபைல். இந்த கேஸ் ஃபைலை நீங்க படிச்சுப் பார்க்கணும்..."

விவேக் வாங்கினான்.

ஃபைலின் மேல் சிவப்பு ஸ்கெட்ச் பேனாவால் கொட்டை கொட்டையாய் எழுதப்பட்ட அந்த வார்த்தைகள் விவேக் - விஷ்ணு இருவரின் கண்களுக்குள்ளும் பாய்ந்தன.

ஒரு நதி

ஒரு பௌர்ணமி

ஒரு பெண்

இருவரின் கண்களிலும் தெரிந்த திகைப்பைப் படித்துவிட்டு மௌரியா புன்னகைத்தார்.

"இது ஏதோ நாவல் தலைப்புன்னு நினைச்சுக்க வேண்டாம். இன்னமும் வெளிச்சத்துக்கு வராத கேஸ் இது. இந்த கேஸை ரகசியமான முறையில் இன்வெஸ்டிகேட் பண்ணச் சொல்லி எனக்கு மேலிடத்திலிருந்து ரகசிய உத்தரவு வந்தது. விஷயம் வெளியே கசியாதபடி இன்வெஸ்டிகேட் பண்ண ஒரு தனித்திறமை வேணும். அந்தத் திறமை உங்ககிட்டே இருக்கிறதாலதான் உங்களைத் தேடி வந்திருக்கேன். முதல்ல இந்த ஃபைலை படிச்சுப் பாருங்க... விஷயங்களை அப்ஸர்வ் பண்ணுங்க... அதுக்கப்புறம் உங்களுக்கு சில சந்தேகங்கள் தோணும். அந்த சந்தேகங்களை என்கிட்டே கேளுங்க..."

விவேக் அந்த ஃபைலின் முதல் பக்கத்தை

மெல்லப் புரட்டினான். கண்கள் வியப்பில் அப்படியே நிலை குத்திப் போயிற்று. முதல் பக்கத்தில் இடம் பெற்றிருந்த போட்டோ அவனுடைய அடிவயிற்றுக்குள் ஒரு குளிரைப் பாய்ச்சியது.

தமிழக வனத்துறை அமைச்சர் செந்தாமரைக் கண்ணன் டி.வி. காமிராக்களுக்கு நடுவில், ப்ளட் லைட்டுகள் வெளிச்சத்தில், பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்.

"வீரப்பனை எப்ப பிடிப்பீங்க...."

"அடிய சக்கிரமே...!"

"அடிய சீக்கிரம்ன்னா... ஒரு வருஷமா... ரெண்டு வருஷமா...?"

"அதை இப்போதைக்கு சொல்ல முடியாது. இரண்டாயிரம் போலீஸார் காட்டுக்குள் புகுந்து தீவிர தேடுதல் வேட்டை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்."

"வீரப்பன் தற்சமயம் தமிழ்நாட்டு - கர்நாடக - கேரள காட்டுப் பகுதிகளில் இல்லையென்றும் இமயமலைப் பக்கம் போய்விட்டான் என்றும் சொல்லப்படுகிறதே...?"

"பொய்...! இங்கேயிருக்கிற காட்டுப் பகுதிக்குள்தான் ஒளிந்து இருக்கிறான்... விரைவில் அவனைப் பிடித்து விடுவோம்..."



"பத்திரிகை நிருபர்கள் ஏதோ பிக்னிக் போகிற மாதிரி காட்டுப் பகுதிக்குள் போய் வீரப்பனைப் பார்த்துப் பேசி - அவனோடு ஜமுக்காளத்தில் ஒன்றாய் உட்கார்ந்து மான் கறி விருந்து சாப்பிட்டுக் கொண்டே பேட்டி எடுத்துக் கொண்டு வரும்போது, போலீஸாரால் மட்டும் அவனைப் பிடிக்க முடியாமல் போவது ஏன்...?"

அமைச்சர் செந்தாமரைக் கண்ணன் அந்த நிருபரைக் கோபமாகப் பார்த்தார்.

"நீ எந்தப் பத்திரிகை...?"

"சமரசம்..."

"ஆளும் கட்சிக்கு எதிரான பத்திரிகைதானே அது...?"

"ஸாரி ஸார்... அநியாயத்துக்கு எதிரான பத்திரிகை..."

"நீ இனி கேள்வி கேட்டா நான் பதில் சொல்ல மாட்டேன். வெளியே போயிடு..."

"ஸாரி... நான் கேட்ட கேள்வி நியாயமானது. அந்த நியாயமான கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியது எங்க கடமை. தமிழ்நாட்டு போலீஸ் திறமை வாய்ந்த போலீஸ். அவங்களால ஒரு வீரப்பனையல்ல ஸார்... காட்டுக்குள்ளே பத்து வீரப்பன்கள் இருந்தாலும் பிடிக்க முடியும்... தப்பு எங்கேயோ இருக்கு...! போலீஸ் வீரப்பனைத் தேடி காட்டுக்குள்ளே நுழைஞ்சா அவன் மீசையை எடுத்துட்டு மொட்டையும் அடிச்சுகிட்டு பெங்களூர் சிட்டிக்குள்ளே வந்துடறானாம் ஸார்... இதெல்லாம்

உண்மையா...?"

அமைச்சர் கோபமானார்.

"யோவ்...! இந்த மாதிரியான நியூஸெல்லாம் உங்களுக்கு எங்கிருந்தய்யா கிடைக்குது?"

"ஜனங்க பேசிக்கிறாங்க ஸார்...!"

செந்தாமரைக் கண்ணன் ஆத்திரத்தோடு எழுந்தார்.

"போங்கய்யா... பேட்டியும் கிடையாது... ஒரு வெங்காயமும் கிடையாது."

"ஸ... ஸார்... ஒரே ஒரு கேள்வி ஸார்..."

"யோவ்... ராமகிருஷ்ணன்...!"

பி.ஏ. ஓடி வந்தார்.

"ஸார்..."

"எல்லாரையும் வெளியே அனுப்பய்யா... வீரப்பன் கிடைக்கிற வரைக்கும் இனிமே ப்ரஸ் மீட்டிங்கே வேண்டாம்..."

செந்தாமரைக் கண்ணன் ஒரு கெட்ட வார்த்தையை பிரயோகம் செய்து கொண்டே தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்து மாடிப்படிகளில் ஏறி பர்சனல் அறைக்குள் நுழைந்தார்.

ஐந்து நிமிஷம் கழித்து பி.ஏ. உள்ளே வந்தார். நிமிர்ந்தார் செந்தாமரைக் கண்ணன்.

"என்ன... எல்லாரும் போயிட்டாங்களா...?"

"போய்ட்டாங்க ஸார்."

"ராமகிருஷ்ணன்..."



"ஸார்..."

"இனிமே ப்ரஸ் மீட் வைக்கிறதாயிருந்தா ஆளும் கட்சிக்கு ஆதரவாயிருக்கிற பத்திரிகைக்காரங்களை எல்லாம் கூப்பிடய்யா."

"ஸார்... அதுல வந்து..."

"என்னய்யா...?"

"இன்னிக்கு தமிழ் நாட்டில் இருக்கிற எல்லாப் பத்திரிகைகளும் ஆளும் கட்சிக்கு எதிராகத்தான் எழுதிகிட்டிருக்கு ஸார்... ஒரு பத்திரிகைகூட நமக்கு ஆதரவாக இல்லை..."

"அப்படீன்னா... இனிமே எந்த ப்ரஸ் மீட்டும் வேண்டாம்...! எந்தப் பத்திரிகைகாரனையும் எனக்குப் பக்கத்துல வரவிடாதே!"

ராமகிருஷ்ணன் தலையாட்டிக்கொண்டே நகர முயல, அமைச்சர் கையமர்த்தினார்.

"பத்திரிகைக்காரங்க வந்து டென்ஷன் பண்ணிட்டுப் போயிட்டாங்க... ஒரு லார்ஜ் ஊத்திக் கொடுத்துட்டு போய்யா..."

"ஸ... ஸார்..."

"என்னய்யா...?"

"இது... இது... பகல் நேரம்...! பனிரெண்டு மணிக்கு செக்ரட்ரியேட்ல ஐ.ஏ.எஸ். ஆபீஸர்ஸ் மீட்டிங் இருக்கு. அதுல சி.எம்.மும் கலந்துக்கறார். நீங்களும் அதுல கலந்துக்கிட்டு பேசப் போறீங்க... சி. எம். மோப்பம் பிடிச்சுட்டார்ன்னா பெரிய வம்பா போயிடும் ஸார்...!"

"அந்த மனுஷன் அதையெல்லாம் கண்டுக்க மாட்டார்ய்யா... ஒரு லார்ஜ் தானே... ஊத்தி குடய்யா... பாடி ஸ்பிரே பண்ணிகிட்டா வாசனை வெளியே எட்டிக்கூட பார்க்காது. அதென்ன பட்டைச் சாராயமா? ஃபாரின் விஸ்கி! மூச்சு விட்டாலே சாக்லேட் வாசனைதான் அடிக்கும்..."

ராமகிருஷ்ணன் அறையின் மூலையில் மறைவாய் இருந்த ஷெல்ஃபை நோக்கிப் போனார். அந்த வெளிநாட்டுப் பாட்டிலை எடுத்தார்.

டம்ளரைத் தேடிக்கொண்டிருந்தபோது அமைச்சரின் செல்போன் குரல் கொடுத்தது.

"யார்ன்னு பாரய்யா... முக்கியமான நபரா இருந்தா... என்கிட்ட குடு... இல்லேன்னா, மீட்டிங்கில் இருக்கார்ன்னு சொல்லிடு..."

"ஹலோ..."

மறுமுனையில் ஒலித்த குரலைக் கேட்டதும் உடம்பெல்லாம் பவ்யமானார் ராமகிருஷ்ணன். "ஒரு நிமிஷம் மேடம்!" என்று சொன்னவர் செந்தாமரைக் கண்ணனிடம் குனிந்தார்.

"ஸார்... சி.எம்.மோட சீஃப் செக்ரட்டரி மங்கையர்க்கரசி லைன்ல இருக்காங்க..."

செந்தாமரைக் கண்ணன் செல்போனை வாங்கி, "அம்மா... வணக்கம்..." என்றார்.

"வணக்கம்! நல்லாயிருக்கீங்களா?"

"ரொம்ப நல்லாயிருக்கேன்ம்மா...!"

"ஒரு சந்தோஷமான செய்தி..."



"சொல்லுங்கம்மா..."

"என்னோட பொண்ணு மதுராவுக்கு கல்யாணம் ஃபிக்ஸ் பண்ணியிருக்கேன். வர்ற மாசம் 16ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆபட்ஸ்பரியில் கல்யாணம்... சி. எம். முன்னிலையில்..."

"கேட்கவே சந்தோஷமாயிருக்கும்மா..."

"அடுத்த வாரம் பத்திரிகையோட நேர்ல வந்து உங்களைக் கூப்பிடறேன். அந்த தேதியில் உங்களுக்கு வெளியூர் பயணம் எதுவும் இல்லையே...?"

"இருந்தாலும் என்னங்கம்மா... அந்த வெளியூர் பயணம் கான்ஸலாயிடும்... சி. எம். முன்னிலையில் நடக்கப் போகிற கல்யாணத்துக்கு நான் வராமே இருப்பேனா...? மாப்பிள்ளை இந்தியாவில் இருக்காரா? ஃபாரின்ல இருக்காரா...?"

"இந்தியாவில்தான்...! டெல்லி டிஃபென்ஸ் மினிஸ்ட்ரியில் ஃபர்ஸ்ட் கிரேடு செக்ரட்ரியாக இருக்கிற புவன் ஷர்மாவின் மகன் ஹரி பிரசாத்தான் மாப்பிள்ளை. கலிபோர்னியா யுனிவர்ஸிட்டியில் எம்.எஸ். பண்ணியிருக்கிற மாப்பிள்ளை... 'ஃப்யூச்சர் சொல்யூஷன்ஸ்' என்கிற கம்ப்யூட்டர் ஸாஃப்ட்வேர் கம்பெனியை டெல்லியில் நடத்திட்டு வர்றார். பில்கேட்ஸ் கம்பெனியோடு ஒரு காண்ட்ராக்ட்டும் போட்டிருக்கார்."

"காதல் கல்யாணமாம்மா...?"

மறுமுனையில் மங்கையர்க்கரசி சிரித்தாள்.

"சொல்லப்போனால் இது ஓரளவுக்கு காதல் கல்யாணம்தான். அமெரிக்காவில் இப்போ படிச்சிட்டிருக்கிற என்னோட மகள் மதுராவும் மாப்பிள்ளை ஹரி பிரசாத்தும் ஏதோ ஒரு கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட செமினாரில் பார்த்துப் பேசியிருக்காங்க... மாப்பிள்ளை ஹரி பிரசாத் இந்தியாவுக்கு வந்ததும் தன்னோட எண்ணத்தை தன்னோட அப்பா புவன் ஷர்மாகிட்டே சொல்ல, அவர் என்னைக் காண்டாக்ட் பண்ண, நான் மதுராகிட்டே பேசி ஓ.கே. வாங்கி கல்யாண தேதியை ஃபிக்ஸ் பண்ணிட்டேன்..."

"உங்க பொண்ணு மதுரா இன்னும் அமெரிக்காவிலிருந்து வரலையா...?"

"அடுத்த வாரம் ரிடர்ன்..."

"கல்யாணத்துக்கு என்னுடைய அட்வான்ஸ் வாழ்த்துக்கள்."

"நன்றி...! நான் இன்னும் நாலைஞ்சு நாள்ல இன்விடேஷனோடு வந்து உங்களைப் பார்க்கிறேன்..."

"வாங்கம்மா...!"

"வணக்கம்."

"வணக்கம்...!" செந்தாமரைக் கண்ணன் செல்போனை அணைத்தார். அவருடைய முகம் இறுகிப் போயிருந்தது. பி.ஏ. ராமகிருஷ்ணன் தயக்கமாய் ஏறிட்டார்.

"என்ன ஸார்... அப்செட் ஆயிட்டீங்க...?"



"அந்த முழு விஸ்கி பாட்டிலைக் கொண்டாந்து எனக்கு முன்னாடி வை..."

"ஸ... ஸார்..."

"ஐ.ஏ.எஸ். ஆபீஸர்ஸ் மீட்டிங்குக்கு நான் வரலை."

## 3

விவேக்கின் பார்வையும் பக்கத்தில் உட்கார்ந்திருந்த விஷ்ணுவின் பார்வையும் ஃபைலின் முதல் பக்கத்தில் இன்னமும் அதிர்ச்சியோடு நிலைத்திருந்தது.

ஃபைலின் முதல் பக்கத்தில் அந்த போட்டோ ஒட்டப்பட்டிருக்க, போட்டோவில் ஒரு பெண் ரத்தக் கறைகளோடு அலங்கோலமாய் மல்லாந்து கிடந்தாள். உடம்பில் தலை இல்லை. கழுத்து வரை வெட்டப்பட்ட உடம்பில் கைகளும் கால்களும் எசகுபிசகாய் மடங்கிக் கிடந்தது. போட்டோவின் பின்னணியில் ஒரு ஆற்றின் நீரோட்டமும் அடர்த்தியான மரங்களும் தெரிய - மரங்களுக்குப் பின்னால் பௌர்ணமி நிலவு பிரகாசித்தது.

"ஸார்... இவ்வளவு கொடூரமாய் கொலை செய்யப்பட்டிருக்கிற இந்தப் பெண் யார்?"

"தெரியாது..." என்று தலையாட்டிய மௌரியா மெல்லிய குரலில் சொன்னார்.

"மிஸ்டர் விவேக்... ! நீங்க இந்த ஃபைலை படிச்சு பார்க்கிறதுக்கு முந்தி கேஸோட விபரம்

என்னான்னு சொல்லிடறேன்.. இது பத்திரிகைகளிலும், டி.வி.யிலும் வராத செய்தி. சரியா இருபத்தேழு நாளைக்கு முன்னாடி கல்பாத்தி நதியோரம் ஒரு பெண்ணின் உடல் தலையில்லாமல் கிடந்தது. அந்தத் தகவல் முதல் முதலா எனக்குத்தான் வந்தது. லோக்கல் போலீசுக்குக்கூட விஷயம் தெரியாது."

"உங்களுக்கு தகவல் கொடுத்தது யார் ஸார்...?"

"பிரேம்குமார்ன்னு ஒருத்தர். கல்பாத்தி நதிக்கரை ஓரமாய் ஹோட்டல் சுவர்ணா இண்ட்டர்நேஷனல்ஸ் என்கிற பெயரில் ஒரு செவன் ஸ்டார் ஹோட்டல் இருக்கு. அந்த ஹோட்டலில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீஸராய் இருப்பவர்தான் பிரேம்குமார். ஹோட்டலுக்குப் பக்கத்துல் இந்த சம்பவம் நடந்திருப்பதால் இது வெளியே தெரிந்தால் ஹோட்டலுக்கு கெட்ட பெயர் ஏற்படும் என்கிற காரணத்தால் இந்த கேஸை ரகசியமாய் மூவ் பண்ண வேண்டியிருக்கு..."

"அந்த சுவர்ணா இண்ட்டர்நேஷனல் ஹோட்டல் யார்க்கு சொந்தம்...?"

"செல்வகிருஷ்ணன்னு ஒருத்தர்... கோயமுத்தூர்ல மில் ஓனர். மில்கள் சரியா ஓடாததுனால எல்லா மில்களையும் வித்து அதுல கிடைச்ச பணத்தை வெச்சு சுவர்ணா இண்ட்டர்நேஷனல் ஹோட்டலை கட்டியிருககார். ஒரு காலத்தில் அரசியலில் பெரும் புள்ளியாய் இருந்தார். இப்போ அவ்வளவா செல்வாக்கு கிடையாது."



"ஓ.கே... ஸார்... நாங்க இப்போ என்ன பண்ணனும்...?"

"கல்பாத்தி நதிக்கரையோரம் தலையில்லாமல் கிடந்த இந்தப் பெண் யார்ங்கிறதை கண்டுபிடிக்கணும். நீங்க இந்த கேஸ் விஷயமா பண்ற இன்வெஸ்டிகேஷன் வெளியே யார்க்கும் தெரியக்கூடாது."

"இருட்டு அறைக்குள்ளே ஒரு கருப்புப் பூனையைத் தேடணும்..."

"அதே..."

"இந்த பாடி எப்படி கண்டுபிடிக்கப்பட்டது ஸார்...?"

"ஒரு மரத்துக்குக் கீழே கோணிப்பையில் பாடி கிடந்திருக்கு. ஹோட்டலில் தங்கியிருந்த ஒரு கப்புள் காலையில் வாக்கிங் போகும்போது பாடியைப் பார்த்துட்டு ஹோட்டல்ல வந்து சொல்லியிருக்காங்க...! உடனே ஹோட்டலின் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீஸர் பிரேம்குமார் எனக்கு தகவல் கொடுத்தார். ஸ்பாட்டுக்கு நானே போனேன். ரொம்பவும் நம்பிக்கையான ஒரு ஃபாரன்ஸிக் ஆபீஸரைக் கூப்பிட்டு சீன் ஆஃப் கிரைம் பார்க்கச் சொன்னேன். கேஸுக்கு உபயோகப்படுகிற மாதிரி எந்தத் தகவலும் கிடைக்கலை... போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டிலும் யூஸ்ஃபுல் க்ளூஸ் நாட் ஃபவுண்ட். கடந்த இருபத்தேழு நாட்களாக எவ்வளவோ முயற்சிகள் பண்ணியும் கொலை செய்யப்பட்ட அந்தப் பெண் யார்ன்னு கண்டுபிடிக்க முடியலை..."

"காணாமல் போன பெண்கள் பற்றி போலீஸ் ஸ்டேஷனில் பலர் புகார் கொடுத்திருப்பாங்களே ஸார். அந்த லிஸ்ட்டை வெச்சுகிட்டு ட்ரை பண்ணியிருக்கலாமே...?"

"இந்த வழியிலேயும் ட்ரை பண்ணிப் பார்த்துட்டேன் மிஸ்டர் விவேக். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்படி கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு வயது இருபதிலிருந்து இருபத்தி மூணுக்குள்தான் இருக்கிறது. ஆனால் காணாமல் போன பெண்கள் எல்லோருமே வயது முப்பதிலிருந்து முப்பத்தி ஐந்துக்குள். எதுவும் பொருந்தி வரவில்லை..."

விஷ்ணு குறுக்கிட்டுக் கேட்டான்.

"ஸார்...! இந்தக் கொலை செய்யப்பட்ட பெண்ணோட தலையை தேடிப் பார்க்க ஏதாவது முயற்சி எடுத்துக்கிட்டீங்களா...?"

"ம்... ரெண்டு போலீஸ் நாய்களை அன்னிக்கு ராத்திரியே கூட்டிட்டுப் போய் பாடியை ஸ்மெல் பண்ணவிட்டு ஓடவிட்டோம்... அது ரெண்டும் நதிக்கரையோரமாய் ரெண்டு கிலோ மீட்டர் தூரம் வரை ஓடி ஒரு மரத்துக்கு கீழே போய் படுத்துகிச்சு... கொலையாளி, கொலை செய்யப்பட்ட பெண்ணோட தலையை ஆத்துக்குள்ள வீசியிருக்கலாம்ன்னு நான் நினைக்கிறேன்..."

விவேக் தன் கையில் இருந்த ஃபைலை மௌனமாய் ஒரு தடவை புரட்டிப் பார்த்துவிட்டு மௌரியாவிடம் நிமிர்ந்தான்.

"ஸார்...! நானும் விஷ்ணுவும் இன்னிக்கே



அந்த ஸ்பாட்டுக்கு போறோம். நாங்க போலீஸ்ன்னு காட்டிக்காமே அந்த ஹோட்டல் சுவர்ணா இன்ட்டர்நேஷ்னலில் நாலைஞ்சு நாள் தங்கறோம். உண்மைகளை தோண்டி எடுக்கறோம்..."

"ஹோட்டலில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீஸர் பிரேம்குமார்க்குக்கூட நீங்க ரெண்டு பேரும் போலீஸ் டிபார்ட்மென்ட்ன்னு தெரிய வேண்டாமா...?"

"வேண்டாம் ஸார்... நாங்க டூரிஸ்ட்ஸ் மாதிரி போய் தங்கறோம். என் பேர் பீட்டர். விஷ்ணுவோட பேர் ஜோஸ்."

"ஓ.கே... ஹோட்டல்ல போய் ரெண்டு பேரும் பீட்டர், ஜோஸ் என்கிற பெயரில் தங்கியிருக்கறீங்க...! அங்கே தங்கிகிட்டு இந்த கேஸை எந்த இடத்திலிருந்து தொட்டு எப்படி இன்வெஸ்டிகேஷனை ஆரம்பிக்கப் போறீங்க...? கல்பாத்தி நதிக்கரையில் ஒரு பெண் கொலையுண்ட சம்பவம் அந்த ஹோட்டலில் வேலை செய்கிற பிரேம்குமாரைத் தவிர வேறு யார்க்கும் தெரியாதே...?"

விவேக் புன்னகைத்தான்.

"ஸார்...! நாங்க கண்களைக் கட்டிகிட்டு கிணத்தில் குதிக்கப் போறோம்... எங்களுக்கு பார்வை தெரியாதே தவிர நீச்சல் நல்லாத் தெரியும்."

# 4

மங்கையர்க்கரசி தமிழக முதலமைச்சர் சத்தியநாராயணனின் அறைக்குள் பவ்யமாய் நுழைந்தாள்.

"வணக்கம் ஸார்..."

கண்களுக்கு ரீடிங் கிளாஸைக் கொடுத்து ஃபைல் ஒன்றை தீவிரமாய் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அறுபது வயது சத்தியநாராயணன் நிமிர்ந்தார். மலர்ந்தார்.

"வாங்கம்மா...! என்ன அது கையில்...?"

"இன்னிக்குத்தான் பத்திரிகை பிரிண்டாகி வந்தது..."

"என்ன பத்திரிகை...?"

"மறந்துட்டீங்களா ஸார்...? எம் பொண்ணு மதுராவோட கல்யாணப் பத்திரிகை. கோயிலுக்குப் போய் முதல் பத்திரிகையை வெச்சுட்டு இரண்டாவது பத்திரிகையை உங்களுக்கு கொடுக்கலாம்னு வந்தேன்."

சத்தியநாராயணன் சிரித்தார். "ஓ...! கல்யாணப் பத்திரிகையா...! இந்த வீரப்பன் பிரச்சனையும் காவேரி பிரச்சனையும் என் மண்டைக்குள்ளே இருக்கும்போது மற்ற விஷயங்கள் எல்லாமே மறந்து போயிடுதும்மா... ஆமா! என்னிக்குக் கல்யாணம்...?"

"அடுத்த மாசம் பதினாறாம் தேதி... ஸார்..."



"கல்யாணம் எங்கே...?"

"ஆபட்ஸ்பரியில்! கல்யாணம் உங்க தலைமையில் நடக்கப் போகுது ஸார்..."

"அது நல்லா ஞாபகம் இருக்கு... 16-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமைதானே...?"

"ஆமா... ஸார்..." சொல்லிக்கொண்டே கல்யாணப் பத்திரிகையை நீட்டினாள் மங்கையர்க்கரசி. அதை வாங்கிய சத்தியநாராயணன் வியப்புக்குப் போனார்.

"என்னங்கம்மா... இது! கல்யாணப் பத்திரிகையா இல்லை... இது லால்போஸ்டரா...! மல்டி கலர்ல இவ்வளவு பெரிய கல்யாணப் பத்திரிகையா? முதல் பக்கத்திலேயே என் பெரிய போட்டோ வேறே...!"

"ஸார்... ஒரு சாதாரண குடும்பத்துல பிறந்த நான் இன்னிக்கு ஒரு தலைமைச் செயலாளரா இருக்கேன்னா அதுக்குக் காரணம் நீங்கதான். நீங்க முதலமைச்சரா இல்லாத பட்சத்தில் இவ்வளவு பெரிய பதவிக்கு என்னால் வரமுடிஞ்சிருக்காது..."

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லிங்கம்மா...! நீங்க இவ்வளவு பெரிய பதவிக்கு வந்ததுக்குக் காரணம் உங்க திறமைதான். கடந்த நாலு வருஷ காலத்துல உங்களுடைய ஆலோசனைகள் என்னுடைய ஆட்சி நிர்வாகத்துக்கு பக்கபலமா இருந்து இருக்கு... சட்ட சிக்கல்கள் வரும்போது அதை துணிவோடு சந்திக்கிற தைரியம் உங்களை விட்டா வேறு யார்க்கு இருக்கு...? பொதுவா நான்

கல்யாணங்களுக்கு போறது கிடையாது. உங்க பொண்ணோட கல்யாணம்ங்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் ஒத்துக்கிட்டேன்... எல்லா அமைச்சர்களுக்கும் இன்ஃபார்ம் பண்ணிட் டீங்களா...?"

"போன வாரமே எல்லார்க்கும் போன் பண்ணி தகவல் சொல்லிட்டேன் ஸார்...! இன்னிக்கு சாயந்தரத்திலிருந்து எல்லாரையும் நேர்ல போய்ப் பார்த்து இன்வைட் பண்ணணும்..."

"அப்படியே... எதிர்க்கட்சியில இருக்கிற முக்கியமான தலைவர்களையும் இன்வைட் பண்ணிருங்கம்மா... யாரையும் மிஸ் பண்ணிடாதீங்க..."

"எஸ்... ஸார்..."

"கல்யாணத்துக்காக எத்தனை நாள் லீவு போட்டிருக்கீங்க...?"

"ரெண்டு வாரம்."

"போதுமா...?"

"போதும் ஸார்..."

"கல்யாணம் முடிஞ்சு நீங்க ட்யூட்டியில் ஜாய்ன் பண்ணுகிற வரைக்கும் சீஃப் செக்ரட்டரியா அய்யங்கார் இருப்பார். அவர்கிட்டே அவசரமா பார்க்க வேண்டிய வேலைகளையெல்லாம் ஒரு லிஸ்ட் போட்டு குடுத்துட்டுப் போயிடுங்க..."

"எஸ்... ஸார்..."

மங்கையர்க்கரசி முதலமைச்சருக்கு பவ்யமாய்



ஒரு வணக்கம் போட்டுவிட்டு அறையினின்று வெளிப்பட்டாள். செக்ரட்ரியேட் வராந்தாவில் நடந்து வருகையில் கைப்பையில் வைத்திருந்த செல்போன் மெலிதாய் முனகியது. எடுத்து காதுக்கு ஒற்றினாள்.

"ஹலோ..."

"அம்மா... நான் மதுரா..."

"என்ன மதுரா...? ராத்திரிதான் போன் பண்ணி அரை மணி நேரம் என்கூட பேசினே... இப்போ மறுபடியும் போன்... என்ன விஷயம்...?"

"மனசுக்குள்ளே ஒரே சந்தோஷம். உன்கூடப் பேசணும்போல் இருந்தது. கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் எப்படி போய்ட்டிருக்கம்மா...?"

"அந்தந்த ட்ராக்ல அது அது . சரியா போய்க்கிட்டிருக்கு... இன்னிக்குத்தான் இன்விடேஷன்ஸ் பிரிண்டாகி வந்தது. கோயிலுக்குப் போய் விநாயகருக்கு முதல் இன்விடேஷனை வெச்சுட்டு ரெண்டாவது இன்விடேஷனை முதலமைச்சருக்கு கொடுத்துட்டு வீட்டுக்கு புறப்பட்டுக்கிட்டு இருக்கேன்..."

"அம்மா... உனக்கு ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்."

"எதுக்கு...?"

"எனக்கு நீ பார்த்து வெச்சிருக்கிற மாப்பிள்ளைக்காக...!"

"என்னடி இது திடீர்னு...?"

"அம்மா...! எனக்கு கணவரா வரப்போகிறவர் ஒரு ஜெம்... நேத்து ராத்திரி மட்டும் அவர் என்கிட்ட

ரெண்டு மணி நேரம் பேசினார். அவர்க்குத்தான் எவ்வளவு விஷயம் தெரிஞ்சிருக்கு...?"

"டெய்லி மாப்பிள்ளை உன்கூடப் பேசறாரா..?"

"ம்... வெரி வெரி ஜைஸண்ட் டாக். பிசினஸ் பற்றி நிறைய பேசறார். அவரோட வாழ்க்கையின் லட்சியம் என்ன தெரியுமாம்மா...? கம்ப்யூட்டர் ஸாஃப்ட்வேர் டெக்னாலஜியில் ஒரு சிலிக்கான் புரட்சியை உண்டாக்கணுமாம்... இந்தியாவின் பில்கேட்ஸ்ன்னு பேர் எடுக்கணுமாம்... அவர் பேசற ஒவ்வொரு வார்த்தையிலும் எக்கச்சக்க தன்னம்பிக்கை... கல்யாணத் தேதி சீக்கிரமா வந்துடக்கூடாதான்னு இருக்கு..."

"வேணும்ன்னா கல்யாணத் தேதியை கொஞ்சம் முன்னாடி வெச்சுக்கலாமா? நான் இன்னும் கல்யாணப் பத்திரிகைகளை டிஸ்ட்ரிபியூட் பண்ணவே ஆரம்பிக்கலை..."

"போம்மா..." வெட்கப்பட்டாள் மதுரா.

"சரி... நீ இப்போ எங்கிருந்து பேசிட்டிருக்கே?"

"ஹைலண்ட் க்ளவுட் ரெஸ்டாரெண்டிலிருந்து! என்னோட கலீக்ஸ்க்கு ஒரு க்ராண்ட்கலா டின்னர் பார்ட்டி கொடுத்துகிட்டிருக்கேன்."

"சரி பார்ட்டி எப்போ முடியும்..?"

"இப்பத்தான் ஸ்டார்ட் பண்ணியிருக்கோம். பார்ட்டி முடிய எப்படியும் ரெண்டு மணி நேரமாயிடும்..."

"மாப்பிள்ளை இன்னிக்கும் போன் பண்றதா சொல்லியிருக்காரா...?"



"ஆமா... ராத்திரி பதினோரு மணிக்கெல்லாம் என்னோட செல் நெம்பரை புடிச்சுக்குவார்..."

"மாப்பிள்ளைகிட்டே பேசும்போது லூஸ் டாக் வேண்டாம். அளவா பேசு. ஜோவியலா இருக்கட்டும். அதே சமயத்துல எல்லை மீறாமே பார்த்துக்கோ!"

"நீ அட்வைஸ் பண்ணி போர் அடிக்க ஆரம்பிச்சுட்டே... இனி என்னால தாங்க முடியாது. செல்லை ஆஃப் பண்ணிடறேன்."

மங்கையர்க்கரசி தன்னுடைய செல்போனையும் அணைத்து கைப்பைக்குள் போட்டுக்கொண்டு - லிஃப்ட்டில் இறங்கி கார்க்கு வந்தாள். டிரைவர் வீராச்சாமி காரின் கதவைத் திறந்துவிட, உள்ளே ஏறி உட்கார்ந்தாள்.

கார் கிளம்பியது.

"வீராச்சாமி...!"

"அம்மா...!"

"காலையில் உன்கிட்டே கொடுத்த லிஸ்ட்படி மத்தியானம் ஒரு மணி வரைக்கும் வி.ஐ.பி.களைப் பார்த்து இன்விடேஷன்களைக் கொடுத்துடணும்..."

"சரிங்கம்மா...!"

லிஸ்ட்டில் உள்ள வி.ஐ.பி.க்களை நேரில் பார்த்து கல்யாணப் பத்திரிகைகளைக் கொடுத்துவிட்டு மங்கையர்க்கரசி தன் பங்களாவுக்குத் திரும்பியபோது பகல் மணி 1.45. வயிறு எக்கச்சக்கமாய் பசித்தது. நேராய் டைனிங் டேபிளுக்குப் போய் உட்கார சமையல்காரன்

மாதவன் தட்டை எடுத்து வைத்து பரிமாற ஆரம்பித்தான்.

"ரைஸ் ரொமபவும் சன்ன ரகம்... சாப்பிட்டுப் பாருங்கம்மா..." மாதவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே டெலிபோன் குரல் கொடுத்தது.

"மாதவன்... யார்ன்னு பாரு...! முக்கியமான நபரா இருந்தா ரிஸீவரை என்கிட்டே கொடு. இல்லேன்னா வேண்டாம்...!"

"சரிங்கம்மா..." மாதவன் வேகவேகமாய் போய் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்து செவிமடுத்துப் பதட்டமானான்.

"அம்மா...!"

"என்ன மாதவன்...?"

"அமெரிக்காவிலிருந்து யாரோ பேசறாங்கம்மா..."

மங்கையர்க்கரசி ரிஸீவரை வாங்கி, "ஹலோ..." என்றாள்.

மறுமுனையில் வேகமான ஆங்கிலம்... "திஸ் ஈஸ் ஃப்ளோரிடா போலீஸ், அமெரிக்கா."

மங்கையர்க்கரசியும் ஆங்கிலம் பேசினாள். "சொல்லுங்கள்... எனன விஷயம்...?"

"பேசுவது மங்கையர்க்கரசியா?"

"ஆமாம்..."

"மதுரா என்னும் பெண்ணின் தாயாரா?"

"ஆமாம்..."



"மன்னிக்க வேண்டும்... இ ... முடிவு மோசமான செய்தி மேடம்..."

"எ...ன்...ன..."

"உங்கள் பெண் ப ... ஹோட்டலிலிருந்து வீடு ... ஃப்ளோரிடா ஹைவேஸ் சாலையில் வேகமாய் கார் ஓட்டிப் போனபோது ஒரு ட்ரக்கின் மீது மோதி விபத்து உங்கள் பெண் மதுரா ஸ்தலத்தில் மரணம்..."

மங்கையர்க்கரசியின் இதயப் பகுதியில் நெருப்பு பற்றிக் கொண்ட மாதிரியான உணர்வு.

"எ...எ...என்ன... சொ... சொல்கிறீர்கள்...?"

"மன்னிக்க வேண்டும்... இது மோசமான செய்திதான்! உங்களுக்கு தெரியப்படுத்துவதைத் தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. விபத்து நடந்து ஒரு மணி நேரமாகிறது. உங்கள் மகளின் கைப்பையில் இருந்த பாஸ்போர்ட், விசா மற்றும் விசிட்டிங் கார்டு இவை மூலமாக உங்களுடைய டெலிபோன் நம்பர், ஈ மெயில் முகவரி கிடைத்தது. விபத்து நடந்த இடத்தில் எடுத்த போட்டோக்களை இண்டர்நெட் மூலமாக உங்கள் வீட்டு ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கிறோம்... கம்ப்யூட்டர் திரையில் உங்கள் பெண்ணின் சேதம் அடைந்த உடலைப் பாருங்கள்."

"நோ...ஓ...ஓ...ஓ...ஓ...!" மங்கையர்க்கரசி நிலைத்த விழிகளோடு வீறிட்டுக் கொண்டிருக்க,

மறுமுனையில் அந்த அமெரிக்க போலீஸ் அதிகாரி தொடர்ந்தார்.

"உங்களுடைய பெண்ணின் உடல் மிகவும் மோசமான முறையில் சிதைந்து உள்ளது. முகத்துக்கு எந்த சேதமும் இல்லை... ஆனால் உடலை இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றால் இப்போதிருந்தே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். உடலை 'எம்பாம்' செய்து இந்தியாவுக்கு அனுப்பலாமா... அல்லது... நீங்களே இங்கு புறப்பட்டு வந்து க்ரிமேஷன் ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறீர்களா...?"

"......"

"உங்கள் துயரம் எனக்குப் புரிகிறது. இருந்தாலும் இந்த நேரத்தில் பேச வேண்டியதைப் பேசி, செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். இங்கே ஃப்ளோரிடாவில் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா...?"

"இ... இல்லை...!"

"என்ன செய்யப் போகிறீர்கள்...?"

"......"

"ஓ.கே. இப்போது நீங்கள் உள்ள சூழ்நிலையில் உங்களால் யோசிக்க முடியாது. நான் அரை மணி நேரம் கழித்து மீண்டும் போன் செய்கிறேன். அதற்குள் நீங்கள் உறவினர்கள், நண்பர்களோடு கலந்து பேசி முடிவு எடுத்து எனக்குத் தெரியப்படுத்துங்கள். இன்னும் அரை மணி நேரம்



கழித்து, இந்திய நேரப்படி பகல் 2:30க்கு போன் செய்கிறேன்."

மறுமுனையில் இணைப்பு அறுந்துவிட, மங்கையர்க்கரசியின் கையில் இருந்த டெலிபோன் ரிஸீவர் பிடிப்பு இல்லாமல் நழுவி கீழே விழுந்தது.

ஹோட்டல் சுவர்ணா இன்ட்டர்நேஷ்னல் பதினோரு மாடிகளோடு ஒரு ராட்சஸன் மாதிரி நின்று கொண்டிருந்தது. அதன் கீழே நின்றிருந்த விஷ்ணு அதைப் பார்த்து வாய் பிளந்தான்.

"பாஸ்...!"

"ம்..."

"ஹோட்டலைப் பார்த்தீங்களா...?"

"பார்த்துக்கிட்டுத்தானே இருக்கேன்." சொன்ன விவேக் சிறிது தோற்றம் மாறியிருந்தான். தாடையில் தாடி.

"ஒரு செவன் ஸ்டார் ஹோட்டலை இன்னிக்குத்தான் நான் பார்க்கிறேன் பாஸ்... பணத்தைப் பணம்னு பார்க்காமே இஷ்டத்துக்கு இரைச்சு கட்டியிருக்காங்க... ஏதோ வெளிநாட்டுக்கு வந்த மாதிரி இருக்கு."

"இப்போ நாம ஹோட்டல் ரிசப்ஷனுக்குப் போறோம். உன் பேரென்ன...? என்னோட பேர் என்ன...?"

"உங்க பேர் பீட்டர்... என்னோட பேர் ஜோஸ்."

"உன் கழுத்துல போட்டிருக்கிற சிலுவை டாலர் சரியா தெரியலை... கொஞ்சம் பளிச்சுன்னு தெரியற மாதிரி போட்டுக்கோ...!"

இருவரும் கிரானைட் படிக்கட்டுகளில் ஏறி, ஹோட்டல் வரவேற்பறையில் நுழைந்து, கௌண்டரை நெருங்கினார்கள்.

கம்ப்யூட்டரில் பில்லிங் செய்து கொண்டிருந்த அந்த ஐஸ் க்ரீம் சிலை நிமிர்ந்தது. பாதரசக் கண்களில் புன்னகை.

"எஸ்... ஸார்...!"

விவேக் சொன்னான்.

"வீ ஆர் கம்மிங் ஃப்ரம் சென்னை. ஒரு எக்னாமிக்கல் சூட் ரிசர்வ் செய்யச்சொல்லி ஃபேக்ஸ் கொடுத்திருந்தோம்."

"யுவர் குட் நேம் ஸார்...?"

"பீட்டர் அண்ட் ஜோஸ்..."

"ஒன் மினிட் ஸார்..."

அந்த ரிசப்ஷனிஸ்ட் பெண் கம்ப்யூட்டர் திரையைப் பார்த்துவிட்டு வந்தாள்.

"எஸ்...! உங்கள் ஃபேக்ஸை ரிசீவ் பண்ணி எக்னாமிக்கல் சூட்டை ரிசர்வ் செய்திருக்கிறோம். சூட் நெம்பர் 23. ஃபிப்த் ஃப்ளோர்..."

"தேங்க்யூ..."

ரூம் சர்வீஸ் பாய் ஓடிவந்து லக்கேஜ்களை எடுத்துக்கொள்ள, விவேக்கும் விஷ்ணுவும் லிஃப்ட்



இருந்த திசை நோக்கி நடந்தார் ... முடிவு
ஐந்தாவது மாடிக்கு வந்து நின்று ...
விரிந்து வைத்திருந்தது.

வெளிப்பட்டு வராந்தாவில் நடந்து ...
இருந்த 32 எண்ணிட்ட சூட்டுக்குள் நுழை...

அமர்க்களமான சூட் மிதமான ஏ.ஸி.யில் இருந்தது. ரூம் சர்வீஸ் பாய் வெளியேறியதும் விவேக்கும் விஷ்ணுவும் படுக்கைக்கு வந்து சாய்ந்தார்கள். விவேக் தன் தாடையில் ஒட்டியிருந்த ட்ரிம் செய்யப்பட்ட தாடியை அகற்றியபடி கேட்டான்.

"விஷ்ணு...! அந்த ஃபைலை முழுவதும் படிச்சுப் பார்த்தியா...?"

"பார்த்தேன் பாஸ்...! ஒரு நதி, ஒரு பௌர்ணமி, ஒரு பெண் - இந்த ஃபைலில் இருக்கிற ஒவ்வொரு வரியும் எனக்கு மனப்பாடம்..."

"சரி... நான் இப்போ கேட்கிற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிக்கிட்டே வா..."

"கேளுங்க பாஸ்..."

"இன்னியோடு அந்தக் கொலை நடந்து எத்தனையாவது நாள்...?"

"சரியா 28 நாள் பாஸ்... கொலை நடந்த அன்னிக்கு பௌர்ணமி தினம்..."

"கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு எத்தனை வயதுன்னு போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் சொல்லுது?"

"இருபதிலிருந்து இருபத்தி மூணுக்குள்..."

"பாடியை மொதல்ல பார்த்தது யாரு...?"

"இந்த ஹோட்டலில் வந்து தங்கிய ஒரு கப்புள். அவங்க புதுமண ஜோடி..."

"அவங்க யார் - என்னாங்கிற விபரம் ஃபைலில் இருக்கா?"

"இல்ல பாஸ்..."

"ஏன் இல்லைங்கிறதுக்குக் காரணம் இருக்கா...?"

"இருக்கு பாஸ்... அவங்க புதுமண ஜோடி. கூடிய சீக்கிரமே ஃபாரினில் போய் செட்டிலாக இருக்காங்க... இந்த நிலைமையில் போலீஸ் விசாரணை, கோர்ட்டு, அது இதுன்னு வந்துட்டா அவங்களால ஃபாரினுக்கு போக முடியாது. அப்படியே போயிட்டாலும் கோர்ட்ல சாட்சி சொல்றதுக்காக அடிக்கடி ஃபாரினிலிருந்து இங்கே வரவேண்டியிருக்கும்... ஸோ இந்தக் காரணங்களுக்காக அந்த புதுமண ஜோடியோட பெயர்கள், அட்ரஸ் எதுவுமே இந்த ஃபைலில் குறிப்பிடப்படலை..."

"பாடி எங்கே கிடந்ததாய் குறிப்பிடப்பட்டிருக்கு...?"

"ஒரு மரத்துக்குக் கீழே கோணிப்பையில்..."

"அது எந்த மரம் என்கிற விபரம் இருக்கா...?"

"இருக்கு பாஸ்...! இந்த கல்பாத்தி நதிக்கரை ஓரமாய் இருக்கிற எல்லா மரங்களும் வனத்துறைக்குச் சேர்ந்ததால ஒவ்வொரு மரத்துக்கும் ஒவ்வொரு நெம்பர் கொடுத்து



இருக்காங்க... 44-ம் நெம்பர் மரத்துக்குக் கீழேதான் தலையில்லாத பெண்ணோட உடல் ஒரு கோணிப்பையில் கிடந்திருக்கு."

"இப்போ மணி என்ன...?"

"ஆறேகால் பாஸ்..."

"கிளம்பு..."

"எங்கே பாஸ்...?"

"44-ம் நெம்பர் மரம் இருக்கிற இடத்தை முதல்ல பார்த்துட்டு வரலாம்..."

"இப்பவே இருட்டாய் இருக்கு பாஸ்...!"

"இருட்டுலதான் போய்ப் பார்க்கணும். டார்ச்சை எடுத்துக்கோ... கிளம்பு..."

"பாஸ்... வந்து..."

"என்னடா...?"

"மர்டர் நடந்து இன்னிக்கு கிட்டத்தட்ட ஒரு மாசமாகப் போகுது. இத்தனை நாளைக்குப் பிறகு அந்த மரத்தைப் போய் பார்க்கிறதால என்ன பிரயோஜனம் பாஸ்..."

"ஏதாவது ஒரு தடயம் கிடைக்கலாம்ன்னு மனசுக்குள்ளே ஒரு 'பட்சி' சொல்லுது... கிளம்பு."

இருவரும் ட்ரஸ் மாற்றிக்கொண்டு ஹோட்டல் அறையை விட்டு வெளியே வந்தபோது மணி 6.30. கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே இருட்டு ஒரு கறுப்பு வார்னிஷ் பேப்பர் மாதிரி தெரிந்தது. இருவரும் ஹோட்டலுக்கு வெளியே வந்தார்கள். கொஞ்சம் தூரத்தில் வனப்பகுதியும் அதன் மேல்

கவிழ்ந்து இருந்த பனிப்புகையும் பார்வைக்குக் கிடைத்தது. நடந்தார்கள்.

"விஷ்ணு...! டார்ச்சை என் கையில கொடு."

கொடுத்தான். பத்து நிமிஷ நடையில் வனப்பகுதி வந்தது.

மங்கையர்க்கரசி அழுது அழுது களைத்து காகிதமாய் உலர்ந்து போயிருக்க, அவளுடைய குடும்ப டாக்டர் குமரகுருவும், குடும்ப வக்கீல் பார்த்தசாரதியும் தகவல் கிடைத்து வீட்டுக்கு வந்து ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சரியாய் 2.20க்கு ஃப்ளோரிடாவில் ஃப்ளோரிடாவிலிருந்து போன் வந்தது. அந்த அமெரிக்க போலீஸ் அதிகாரி பேசினார். மங்கையர்க்கரசி போனை அட்டெண்ட் செய்யும் நிலைமையில் இல்லாததால் டாக்டர் குமரகுரு பேசினார்.

"நான்... டாக்டர் குமரகுரு! மங்கையர்க்கரசியின் குடும்ப டாக்டர்..."

"என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்...? மதுராவின் இறுதிக் காரியங்களை நடத்த மங்கையர்க்கரசி ஃப்ளோரிடாவுக்கு வரப்போகிறார்களா அல்லது மதுராவின் உடலை நாங்கள் 'எம்பாம்' செய்து ஃப்ளைட்டில் ஒரு அதிகாரியோடு அனுப்பி வைக்கலாமா...?"



"மன்னிக்க வேண்டும். இன்னும் நாங்க முடிவு செய்யவில்லை."

"இண்டர்நெட்டில் விபத்து நடந்த போட்டோக்களை பார்த்தீர்களா?"

"இன்னமும் பார்க்கவில்லை..."

"முதலில் அந்த விபத்துப் படங்களைப் பாருங்கள். அப்போதுதான் உங்களால் ஒரு முடிவுக்கு வரமுடியும். இந்த ஈ மெயில் முகவரியை குறித்துக்கொண்டு உடனடியாய் அந்த விபத்துப் படங்களைப் பாருங்கள். பத்து நிமிஷம் கழித்துப் போன் செய்கிறேன்."

அமெரிக்க போலீஸ் அதிகாரி சொன்ன ஈ மெயில் முகவரியைக் குறித்துக் கொண்டு, டெலிபோனை அணைத்த டாக்டர், அருகிலிருந்த கம்ப்யூட்டருக்கு உயிர் கொடுத்து ஈ மெயில் முகவரியை கீ-போர்டின் பட்டன்களில் தட்டினார்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு... கம்ப்யூட்டர் திரை, இண்டர்நெட் மூலமாக ஃப்ளோரிடாவில் நடந்த அந்த விபத்துப் படங்களை விதவிதமான கோணங்களில் காட்டியது. மிகவும் மோசமான விபத்து என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது. டாக்ஸி டிரைவர் ரத்தமாய் மல்லாந்து கிடக்க, மதுரா டாக்ஸியின் இடிபாடுகளுக்கிடையில் உடல் நசுங்கித் தெரிந்தாள். முகம் சேதமாகாமல் அப்படியே இருந்தது. மங்கையர்க்கரசியின் விழிகள் அப்படியே நிலைகுத்திப் போயிற்று.

குடும்ப வக்கீல் பார்த்தசாரதி, குமரகுருவிடம் திரும்பினார்.

"டாக்டர்...! மதுராவின் உடல் நிறையவே சிதைந்து போயிருப்பது தெரிகிறது. பாடியை 'எம்பாம்' செய்து கொண்டு வருவது உசிதமா... அல்லது ஃப்ளோரிடாவுக்குப் போய் இறுதிக் காரியங்களை செய்து விட்டு வருவது உசிதமா?"

"மிஸஸ் மங்கையர்க்கரசியிடம் கேட்டுத்தான் முடிவெடுக்க வேண்டும்..."

"ஸாரி டாக்டர்... மேடம் இப்போது அவுட் ஆஃப் கண்ட்ரோல். எந்த முடிவையும் நீங்களும் நானும்தான் எடுக்க வேண்டும்."

"சரி... என்ன செய்யலாம்... * நீங்களே சொல்லுங்கள்."

"மதுராவின் இறுதிக் காரியங்களை ஃப்ளோரிடாவில் நடத்துவது சாத்தியமில்லாத ஒன்று. இறுதிக் காரியங்களை நடத்த மேடம் மட்டும் தனியாய் போக முடியாது. அவரோடு சில முக்கியமான உறவினர்களும் நண்பர்களும் போயாக வேண்டும். ஸோ... பாடியை நல்லமுறையில் 'எம்பாம்' செய்து இங்கே அனுப்பி வைக்கும்படி சொல்வதுதான் எனக்குச் சரியாகப்படுகிறது."

பார்த்தசாரதி பேசிக்கொண்டிருக்கும்போதே டெலிபோன் அழைத்தது. எடுத்தார். லைனில் அமெரிக்க போலீஸ் அதிகாரி.

"என்ன ஸார்... யோசனை செய்து முடிவுக்கு வந்துவிட்டீர்களா...?"

"எஸ்..."



"சொல்லுங்கள்..."

"மதுராவின் உடலை உரிய முறையில் 'எம்பாம்' செய்து ஒரு போலீஸ் அதிகாரியோடு அனுப்பி வைத்துவிடுங்கள். அது எந்த ஃப்ளைட், சென்னைக்கு வந்து சேரும் நேரம், போன்ற விபரங்களை எங்களுக்குத் தெரியப்படுத்திவிட்டால் நாங்கள் அந்த நேரத்துக்கு விமான நிலையம் சென்று மதுராவின் உடலைப் பெற்றுக் கொள்கிறோம்..."

"ஓ.கே...! இப்போது உடல் 'எம்பாம்' செய்வதற்காக ஹாஸ்பிட்டலுக்கு கொண்டுபோகப்பட்டுள்ளது. அந்த வேலை முடிந்ததும் அமெரிக்க நேரப்படி விடியற்காலை 5 மணிக்கு ஃப்ளோரிடா விமான நிலையத்திலிருந்து புறப்படும் AL 212 விமானத்தில் மதுராவின் உடலை அனுப்பிவைக்கிறோம். உடலுக்கு பாதுகாப்பாக போலீஸ் அதிகாரி ஏர்ன்ஸ்ட் மைக்கேல் என்பவரை அனுப்பி வைக்கிறோம். விமானம் இந்திய நேரப்படி நாளை இரவு 9 மணியளவில் சென்னையை அடையும். மதுராவின் உடலைப் பெற்றுக்கொண்ட பின் போலீஸ் அதிகாரி ஏர்ன்ஸ்ட் மைக்கேல் கொண்டு வரும் ஃபாரங்களில் உங்களில் பொறுப்பான ஒருவர் யாராவது கையெழுத்திட்டு முழு

முகவரியையும் எழுதிவிடுங்கள்..."

"கண்டிப்பாக..."

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட பார்த்தசாரதியும் ரிஸீவரை வைத்துவிட்டு டாக்டர்

குமரகுருவிடம் திரும்பினார்.

அவர் மயங்கிக் கிடந்த மங்கையர்க்கரசியை தீவிரமாய் பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

"டாக்டர்... மேடத்துக்கு என்ன...?"

"மேடம் ஏற்கெனவே பி.பி. பேஷன்ட். மதுரா இறந்த துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியலை. ஹார்ட்ல மைல்ட் அட்டாக்... உடனடியாக ஹாஸ்பிட்டலைஸ் பண்ணணும்..."

"ஆம்புலன்ஸுக்கு போன் பண்ணட்டுமா?"

"ப்ளீஸ்...!"

## 7

விவேக்கும் விஷ்ணுவும் டார்ச் லைட்டை உயிர்ப்பித்துக் கொண்டு அந்த இருட்டில் மெல்ல நடந்து வனப்பகுதியை நோக்கி நடந்தார்கள். பதினைந்து நிமிஷ நடையில் வனப்பகுதி வந்தது. பெரும்பாலும் தேக்கு மரங்கள். நடுநடுவே சில்வர் ஓக் மரங்கள். மரங்களுக்கு நடுவே சௌகரியமாக நடந்து போக போடப்பட்ட மண் பாதை.

"விஷ்ணு... கோணிப்பை கிடந்த அந்த மரத்தோட நெம்பர் 44 தானே...?"

"ஆமா பாஸ்..."

"தேடிக் கண்டுபிடி...!" விவேக் சொல்ல விஷ்ணு சுற்றும் முற்றும் பார்த்தான். "18-ம் நெம்பர் மரம் இங்கே இருக்கு பாஸ்!"



டார்ச் லைட்டின் வெளிச்சம் மரத்துக்கு மரம் தாவ, எண்கள் பார்வைக்கு கிடைத்து விலகின.

"பாஸ்! இங்கே 41..."

விஷ்ணு சொன்ன பக்கம் டார்ச் வெளிச்சம் திரும்பியது. 42... 43... 44...

டார்ச் வெளிச்சம் சட்டென்று திகைத்த மாதிரி நின்றது.

44-ம் எண்ணிட்ட மரத்துக்குக் கீழே - சாக்கு மூட்டை ஒன்று உருண்டு கிடந்தது.

## 8

விமான நிலையம்.

இரவு எட்டரை மணி.

குடும்ப டாக்டர் குமரகுருவும், குடும்ப வக்கீல் பார்த்தசாரதியும் ஏர்போர்ட்டின் லௌன்ச்சுகளில் போடப்பட்டிருந்த பி.வி.சி. நாற்காலிகளில் கவலை தோய்ந்த முகங்களோடு சாய்ந்திருக்க... பக்கத்து நாற்காலிகளில் புவன் ஷர்மாவும், அவருடைய மகன் ஹரி பிரசாத்தும் இருண்ட முகங்களோடு தெரிந்தார்கள். புவன் ஷர்மா உஷ்ணமாய் பெருமூச்சு விட்டார்.

"மதுரா அழகான பெண் மட்டும் இல்லை. ஐ க்யூ நிறைந்த புத்திசாலிப் பெண். அப்படியொரு பெண் எங்க வீட்டுக்கு மருமகளா வர்றதை நினைச்சு பெருமை பட்டுக்கிட்டு இருந்தேன்.

அதெல்லாம் இப்போ வெறும் கனவா போயிடுச்சு... யாரோட கண் பட்டதோ... கல்யாணத்துக்கு முன்னாடியே துயரம்...!"

ஹரி பிரசாத்தின் கண்களில் நீர் பளபளத்து நின்றிருக்க, கையில் வைத்திருந்த கர்ச்சீப்பால் வாயைப் பொத்தி அழுகைக்கு அணை போட்டான்.

லௌன்சுக்கு கொஞ்சம் தள்ளி பத்திரிகை நிருபர்களும், டி.வி. சானல் நிருபர்களும் போலீஸ் ஸ்க்வாடோடு கலந்து நின்றிருக்க, போலீஷ் கமிஷனர் மாணிக்கவாசகம் ஏர்போர்ட் ஆபீஸர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தார்.

"ஃப்ளைட் கரெக்ட் டைம்தானே...?"

"எஸ்...! சரியா ஒன்பது மணிக்கெல்லாம் லேண்ட் ஆயிடும்..."

அப்போது மாணிக்கவாசகத்தின் இடது உள்ளங்கையில் இருந்த செல்போன் மெலிதாய் குரல் கொடுத்தது.

மறுமுனையில் முதலமைச்சர் சத்தியநாராயணன்.

"ஸ... ஸார்..."

"என்ன மிஸ்டர் மாணிக்கவாசகம்...! இப்போ ஏர்போர்ட்லேதானே இருக்கீங்க...?"

"ஆமா... ஸார்..."

"ஃப்ளைட் எத்தனை மணிக்கு வருது...?"

"ஒன்பது மணிக்கு ஸார்..."

"லேட் இல்லையே...?"



"கரெக்ட் டைம் ஸார்..."

"ஏர்போர்ட்டுக்கு மங்கையர்க்கரசி வந்து இருக்காங்களா...?"

"இல்ல ஸார்... அவங்க இன்னமும் ஹாஸ்பிடல்லதான் இருக்காங்க... அவுங்களுக்கு பி.பி. அவுட் ஆஃப் கண்ட்ரோல்."

"சரி...! பாடியை ஏர்போர்ட்டிலிருந்து வீட்டுக்குக் கொண்டு போனதும் எனக்கு தகவல் கொடுங்க...! கூட்டம் இல்லாதபோதே வந்து அஞ்சலி செலுத்திடலாம்..."

"எஸ் ஸார்...!"

செல்போனை அணைத்துவிட்டு கமிஷ்னர் மாணிக்கவாசகம் பத்திரிகை நிருபர்களை நோக்கி நடந்தார். அவர்களுக்கு மத்தியில் போய் நின்று, மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

"எல்லா பத்திரிகைக்காரங்களுக்கும் ஒண்ணைச் சொல்லுகிறேன். நடந்திருக்கிற சம்பவம் ஒரு வருத்தத்துக்குரிய சம்பவம். தலைமைச் செயலாளரின் மகள் மதுரா கேப்ஃளோரிடாவில் சாலை விபத்தில் மரணமடைந்திருக்கிறார். இந்த உண்மையான செய்தியை சில எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் வேறு விதமாய்... விஷமத்தனமாய் செய்திகளை வெளியிட்டுக்கிட்டு இருக்கு. இது ரொம்பவும் தப்பு...! ஒரு பெண் உயிரோடு இருந்தாலும் சரி, இல்லாமே போனாலும் சரி... அவளுடைய மானத்தோடு விளையாடக்கூடாது. பத்திரிகையோட

விற்பனைக்காக எதை வேணும்ன்னாலும் எழுதக்கூடாது..." கமிஷ்னர் பேச்சை நிறுத்ியதும் தாடி வைத்த ஒரு நிருபர் குரல் கொடுத்தார்.

"ஸார்... மதுரா தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப்போயிருக்கிறதாக ஒரு செய்தி... அது உண்மையா... பொய்யா...?"

"பொய்...! மதுரா சாலை விபத்தில் இறந்து போனதுதான் உண்மை. இண்டர்நெட்டில் விபத்து நடந்த இடத்தையும் உடல் உருக்குலைந்த மதுராவையும் பார்த்துட்டுதான் ஏர்போர்ட்டுக்கு வந்திருக்கேன். மங்கையர்க்கரசி மேடம் ஒரு அரசியல்வாதி கிடையாது. தலைமைச் செயலாளர் ஸோ... இந்த காஸிப் நியூஸ் எதுவும் வேண்டாம்..." கமிஷ்னர் சொல்லிக்கொண்டிருக்க...

ஒலிபெருக்கியில் இனிமையான பெண் குரலில் அறிவிப்பு வெளியாயிற்று...

"ஃப்ளோரிடா விமானம் வான எல்லையில் தென்பட ஆரம்பித்துவிட்டது. பார்வையாளர்கள் லௌஞ்ச் எல்லையைத் தாண்டி அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்..."

மாணிக்கவாசகம் பத்திரிகையாளரிடம் விடைபெற்றுக்கொண்டு குமரகுரு. பார்த்தசாரதி இருந்த இடத்துக்கு வந்தார்.

"ஃப்ளைட் இன்னும் கொஞ்ச நேரத்துல லேண்ட் ஆயிடும்."

"ஃபார்மாலிட்டீஸ் அதிகம் இல்லாமே



பார்த்துக்குங்க கமிஷ்னர் ஸார்... பாடியைக் கொடுக்க லேட் பண்ணிடப் போறாங்க..."

"நோ... நோ...! யூ நீட் நாட் வொர்ரி... நான் ஏர்போர்ட் ஆபீஸர்கிட்டே எல்லாம் பேசிட்டேன். பாடி இறக்கப்பட்ட பதினைந்து நிமிஷத்துக்குள்ளே ஃபார்மாலிட்டீஸை முடிச்சுகிட்டு பாடியை கொடுத்துடுவாங்க..."

விமானம் ரன்வேயில் கால் பதித்து ஓடி வந்து கொண்டிருந்தது. ஏர்போர்ட்டின் லௌஞ்ச் பரப்பில் இப்போது கனமான அமைதி.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு விமானம் தன்னுடைய எல்லா இயக்கங்களையும் நிறுத்திக் கொள்ள - விமானத்தின் இடுப்போடு ஸ்டேர்ஸ் பொருத்தப்பட்டு பயணிகள் ஒவ்வொருவராய் இறங்க ஆரம்பித்தார்கள்.

பயணிகளில் பாதிப் பேர் இறங்கியிருந்தபோது ஏர்போர்ட் ஆபீஸர் வேகவேகமாய் கமிஷ்னரை நோக்கி வந்தார். மிஸ்டர் மாணிக்கவாசகம்... இந்த ஃப்ளைட்டில்தானே பாடி வருவதாகச் சொன்னீர்கள்...?"

"ஆமாம்..."

"பாடி எதுவும் ஃப்ளைட்டில் இல்லையே...?"

"என்ன சொல்கிறீர்கள்? பாடி இல்லையா...?"

"ஆமாம்... ஃப்ளோரிடா விமானத்தில் பயணம் செய்தது 149 பேர். இது தவிர விமான சிப்பந்திகள் பத்து பேர். விமானம் ரன்வேயில் வந்து நின்றதுமே வயர்லஸ்ஸில் தொடர்பு கொண்டு

விமானத்தின் பைலட்களோடு பேசினேன். விமானத்தில் டெட் பாடி எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்."

டாக்டர் குமரகுருவும் வக்கீல் பார்த்தசாரதியும் திகைப்பான முகங்களோடு ஏர்போர்ட் ஆபீஸரை ஏறிட்டார்கள்.

"இதே விமானத்தில்தான் மதுராவின் டெட் பாடியை அனுப்பியிருப்பதாக அமெரிக்க போலீஸார் சொன்னார்கள்."

"மறுபடியும் அவர்களுக்கு போன் செய்து கேளுங்கள். டெலிபோன் நம்பர் இருக்கிறதா?"

"இருக்கிறது..."

"உடனே போன் செய்யுங்கள்!"

டாக்டர் குமரகுரு தன் செல்போனை எடுத்துக்கொண்டு ஒரு பேப்பரில் குறித்து வைத்திருந்த ஃப்ளோரிடா போலீஸ் அதிகாரியின் டெலிபோன் எண்களைப் பார்த்து பட்டன்களைத் தட்டினார்.

உடனே - மறுமுனையில் ரிக்கார்டட் வாய்ஸ் கேட்டது.

"இது பழுதான டெலிபோன் எண். இதன் சொந்தக்காரர் இறந்து இரண்டு வருடமாகிவிட்டது. இந்த எண்ணை நீங்கள் தொடர்பு கொள்ள முடியாது."



# ௯

மரத்துக்குக் கீழே உருண்டு கிடந்த சாக்கு மூட்டையைப் பார்த்ததும் விவேக்கும் விஷ்ணுவும் சில விநாடிகளுக்கு இருந்த இடத்தை விட்டு அசையாமல் அப்படியே நின்றார்கள்.

"பாஸ்...!"

"ம்...!"

"அடிவயித்துல ஒரு அவஸ்தை... உடனே மூச்சா போகணும் போல இருக்க...! இன்னிக்கும் பௌர்ணமிதான். அதே கல்பாத்தி நதி. அதே 44-ம் நெம்பர் மரம். அதே மாதிரி ஒரு சாக்கு மூட்டை..."

"மூட்டைக்குள்ளே அதே மாதிரி தலையில்லாத ஒரு பொண்ணோட உடம்பு இருக்கும்னு நினைக்கிறியா...?"

"இதிலென்ன சந்தேகம் பாஸ்...! மூட்டையைப் பார்த்தா அறுவடை பண்ணின செல் மூட்டை மாதிரியா தெரியுது...?"

"சரி... போய் மூட்டையைப் பிரி. பார்த்துடலாம்."

"மூச்சா போயிட்டு வந்துடட்டுமா... பாஸ்...?"

"போய்ட்டு வாமா..."

"ஏதோ இந்தக் காட்டுக்கு என்னால முடிஞ்ச யூரியா..." விஷ்ணு சொல்லிக்கொண்டே பக்கத்து மரத்துக்குப் பின்னால் போய் மறைய - விவேக் டார்ச் வெளிச்சத்தோடு மூட்டைக்குப் பக்கத்தில்

போய் குத்துக்காலிட்டு உட்கார்ந்தான். லேசாய் மூச்சை இழுத்துப் பார்த்தான்.

காற்றில் எந்த கெட்ட வாடையும் இல்லை. சாக்கு மூட்டையின் வாயை சணல் கயிற்றால் இறுக்கமாகக் கட்டியிருந்தார்கள்.

விவேக் மூட்டையை மெல்ல அசைத்துப் பார்த்தான். உள்ளே இருப்பதை அனுமானிக்க முடியவில்லை.

"விஷ்ணு...!"

"என்ன பாஸ்...?" மரத்திற்குப் பின்னாலிருந்து குரல் வந்தது.

"நீ நினைக்கிற மாதிரி இது பாடி கிடையாது..."

"என் வயித்துல பால் வார்த்தீங்க பாஸ்..." விஷ்ணு ஜிப்பை இழுத்து விட்டுக்கொண்டு வெளியே வந்தான்.

"மூட்டைக்குள்ளே டெட் பாடி இருந்தா காத்துல வாடை இருக்கும்... இவ்வளவு பக்கத்துல என்னால உட்கார்ந்துக்கிட்டு இருக்க முடியுமா? வா... வந்து மூட்டையைப் பிரி..."

விஷ்ணு மூட்டைக்கு மறுபக்கமாய் வந்து உட்கார்ந்தான். தன் பாக்கெட்டில் இருந்த சிறிய பேனாக் கத்தியை எடுத்து மூட்டையின் வாயை இறுக்கிக் கட்டியிருந்த கயிற்றை சரசரவென்று அறுத்தான்.

கயிறு துண்டுகளாய் அறுபட்டு மூட்டையின் வாய் நெகிழ்ந்தது. விஷ்ணு அதை அகலமாய் விரித்தான்.



உள்ளே அந்த ஐந்தடி நீள பாலிதீன் கவருக்குள் நீளமாய் ஏதோ ஒன்று.

"பாஸ்... டார்ச்சை அடிங்க...!"

விவேக் டார்ச் வெளிச்சத்தை சாக்குப் பைக்குள்ளே அடிக்க, பாலிதீன் கவருக்குள் வைத்துக் கட்டப்பட்ட அந்தப் பெண்ணின் உடல் பார்வைக்குக் கிடைத்தது.

தலையில்லாத பெண்ணின் உடல்.

## 10

மங்கையர்க்கரசியின் பங்களா.

ராத்திரி பதினோரு மணி. பங்களாவுக்கு உள்ளேயும் வெளியேயும் போலீஸ் உயர் அதிகாரிகள் பரவியிருந்தார்கள். ஹால் சோபாவில் டாக்டர் குமரகுரு, வக்கீல் பார்த்தசாரதி, புவன் ஷர்மா, ஹரி பிரசாத் - கவலை முகங்களாய் காட்சியளிக்க... போலீஸ் கமிஷ்னர் மாணிக்கவாசகம் ஒரு ஓரமாய் நின்று கொண்டு செல்போனில் முதலமைச்சரோடு பேசிக்கொண்டிருந்தார்.

"இதுவரைக்கும் எந்தத் தகவலும் இல்லை ஸார்..."

"அமெரிக்க ஃப்ளோரிடா போலீஸ், விபத்து பற்றி என்ன சொல்றாங்க..?"

"ஃப்ளோரிடா ஹைவேஸ் ரோட்டில் கடந்த ஒரு வார காலமாய் எந்தப் பெரிய விபத்தும்

நடக்கலை... மதுரா என்கிற இந்தியப் பெண் விபத்தில் சிக்கியதாக ஃப்ளோரிடா போலீசுக்குத் தகவலே இல்லைன்னு சொல்றாங்க..."

"அப்படீன்னா... இண்டர்நெட்ல மதுராவோட விபத்து போட்டோஸ்... பொய்யா...?"

"பொய்தான்னு அமெரிக்க போலீஸ் சொல்றாங்க... எல்லாமே கிராஃபிக்ஸ். யாரோ விளையாடியிருக்காங்க ஸார்..."

"சரி...! ஃப்ளோரிடாவில் மதுரா தங்கியிருக்கிற பிளாட் முகவரியை போலீசுக்கு கொடுத்து அந்த முகவரிக்குப் போய் விசாரிக்கச் சொல்லலையா...?"

"போலீஸ் அந்த முகவரிக்கும் போய் பார்த்து இருக்காங்க ஸார்... பிளாட் பூட்டிக் கிடந்திருக்கு... அக்கம் பக்கத்து பிளாட்டுகளில் இருக்கிறவங்ககிட்டேயும் விசாரிச்சுப் பார்த்து இருக்காங்க... யாருக்கும் மதுராவைப் பத்தி தெரியவில்லை..."

"மதுரா கடத்தப்பட்டு இருக்கலாமோ...?"

"அமெரிக்க போலீஸாரோட சந்தேகம் அதுதான் ஸார்... அழகான இந்தியப் பெண்ணான மதுராவை தப்பான எண்ணத்தோடு யாராவது கடத்திக் கொண்டு போயிருக்கலாம் என்கிற கோணத்தில் போலீஸார் விசாரணை பண்ணிகிட்டு இருக்காங்க... எந்த நேரத்திலும் ஃப்ளோரிடா போலீஸ்கிட்டேயிருந்து தகவல் வரலாம் என்கிற நம்பிக்கையோடு மிஸஸ் மங்கையர்க்கரசி வீட்ல எல்லாரும் வெயிட் பண்ணிகிட்டு இருக்காங்க..."



"மங்கையர்க்கரசி ஹாஸ்பிடலிலிருந்து திரும்பிட்டாங்களா?"

"இல்ல ஸார்... இன்னமும் ஹாஸ்பிடல்லதான் இருக்காங்க..."

"இந்த விஷயமெல்லாம் தெரியுமா?"

"தெரியாது ஸார்! மயக்க ஊசி போட்டு தூங்க பண்ணியிருக்காங்க!"

"சரி! ஃப்ளோரிடா போலீஸிலிருந்து போன் வந்ததும் என்னை காண்டாக்ட் பண்ணுங்க..."

"எஸ.... ஸார்...!" செல்போனை அணைத்த மாணிக்கவாசகம் அதைப் பாக்கெட்டுக்குள் சொருகிக்கொண்டு டாக்டர் குமரகுருவை நோக்கிப் போக முயல, வக்கீல் பார்த்தசாரதி எதிர்பட்டார்.

"எக்ஸ்க்யூஸ் மீ... உங்ககிட்டே ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும்..."

"சொல்லுங்க..."

"வாங்க... அந்த ரூமுக்கு போயிடலாம்..." பார்த்தசாரதி பக்கத்து அறையை நோக்கிப் போக, கமிஷனர் மாணிக்கவாசகம் பின்தொடர்ந்தார்.

இருவரும் அறைக்குள் நுழைந்து ஜன்னலுக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டார்கள்.

"சொல்லுங்க வக்கீல் ஸார்... என்ன விஷயம்?"

"மதுரா காணாமல் போயிருக்கிற இந்த விவகாரத்துல எனக்கு ஒரு சந்தேகம்..."

"என்ன... சந்தேகம்...? எதுவாயிருந்தாலும்

தைரியமா சொல்லுங்க...!" கமிஷ்னர் மாணிக்கவாசகம் ஆர்வமானார்.

"மதுராவுக்கு வெளிநாட்டில் ஏதோ ஒரு ஆபத்து ஏற்பட்டு இருக்கு. அந்த ஆபத்துக்கு நிச்சயமா வெளிநாட்டைச் சேர்ந்தவங்க காரணமாக இருக்க முடியாது."

"பின்னே...?"

"இந்த சென்னையில் இருக்கிற ஒருத்தர்தான் காரணமாய் இருக்க முடியும்..."

"சென்னையில் இருக்கிற ஒருத்தரா...?"

"எஸ்..."

"யார் அந்த ஆள்...? சொல்லுங்க..."

"பெரிய பதவியில் இருக்கார்... ரூலிங் பார்ட்டி வேற!"

"பெரிய பதவியின்னா... மந்திரி பதவியா...?"

"ஆமா... அதேதான்...!"

"யார் அந்த மந்திரி...?"

"தமிழக வனத்துறை மந்திரி செந்தாமரைக்கண்ணன்."

கமிஷ்னர் தாணிக்கவாசகம் திகைத்துப்போய் மோவாயைத் தேய்த்துக் கொண்டார். "மதுரா காணாமல் போன விவகாரத்தில் மந்திரி செந்தாமரைக்கண்ணனுக்கு எப்படி தொடர்பு...?"

வக்கீல் குரலைத் தாழ்த்திக் கொண்டார். "செந்தாமரைக்கண்ணனுக்கு ஒரு மகன். அவன் பேரு சேரலாதன். படிப்பு ஸ்கூல் ஃபைனல்



வரைக்கும்தான். ஆனா ஏகப்பட்ட சொத்துக்கு வாரிசு. தமிழ் நாட்டில் இருக்கிற ஒயின் கடைகளில் பாதி கடைகள் சேரலாதனுக்கு சொந்தம். ஊருக்கு ஒரு பெண்ணோடு சிநேகம். அதையெல்லாம் கட் பண்றதுக்காக தன்னோட பையனுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி வைக்க நினைத்தார் செந்தாமரைக்கண்ணன். ஒரு பெண்ணையும் செலக்ட் பண்ணினார். அந்தப் பெண் வேற யாரும் இல்லை. தலைமைச் செயலாளர் மங்கையர்க்கரசியின் மகள் மதுராதான். பெண்ணைக் கேட்டு தனக்கு வேண்டிய ஒருத்தர் மூலமா மங்கையர்க்கரசிகிட்டே பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் மந்திரி. பேச்சுவார்த்தையில் தோல்வி. 'உங்க பையனுக்கு என்னோட பொண்ணு மதுராவைக் கொடுக்க இஷ்டமில்லை'ன்னு மங்கையர்க்கரசியே சொல்லியிருக்கார். இந்த விஷயம் எனக்கும் டாக்டர் குமரகுருவுக்கும் மட்டும்தான் தெரியும். வெளியே யாருக்கும் தெரியாது."

"தன்னோட பையனுக்கு பொண்ணு கொடுக்காத ஆத்திரம் காரணமாக மந்திரி செந்தாமரைக்கண்ணன் வெளிநாட்டில் இருக்கிற மதுராவுக்கு ஏதாவது கெடுதலை பண்ணியிருக்கலாம்ன்னு நினைக்கறீங்க இல்லையா வக்கீல் ஸார்...?"

"ஆமா...! அதுமட்டும் இல்லை... மதுரா விபத்துல சிக்கி உயிரிழந்துவிட்டதாக பொய்யான தகவலையும் ஈ மெயிலில் கிராஃபிக்ஸ் விபத்து

போட்டோவையும் அனுப்பி மங்கையர்க்கரசியை டார்ச்சர் பண்ணியதும் அவராகத்தான் இருக்கணும்... நீங்க கொஞ்சம் முயற்சி எடுத்து ஒரு ரகசிய விசாரணையை மேற்கொண்டால் 24 மணி நேரத்துக்குள்ளே மதுரா எங்கே இருக்கான்னு தெரிஞ்சுடும்."

"விஷயத்தை என்கிட்டே சொல்லிட்டீங்கள்ள... இனிமே நான் பார்த்துக்கறேன்...! மந்திரி செந்தாமரைக்கண்ணன் தன்னோட மகனுக்கு மதுராவை பெண் கேட்ட விஷயம் உங்களையும் டாக்டர் குமரகுருவையும் தவிர வேறு யார் யாருக்கெல்லாம் தெரியும்...? "

"வேற யார்க்கும் தெரியாது..."

"மதுராவுக்கு...?"

"மதுராவுக்கும் தெரியாது..."

கமிஷ்னர் மாணிக்கவாசகம் யோசனையாய் நெற்றியைக் கீறிக்கொண்டதர். "இன்றைக்கு இருக்கிற அரசியல்வாதிகள் எந்த ஒரு காரியத்துக்கும் துணிவாங்க. முகத்துக்கு முன்னாடி கிரிச்சுகிட்டே முதுகுக்குப் பின்னாடி கத்தியால குத்தற கலை அவங்களுக்கு மட்டும்தான் தெரியும். செந்தாமரைக்கண்ணனோட உண்மையான பேரு மாடசாமி. கோணமுத்தூர்க்குப் பக்கத்துல கோணவாய்க்கான்பாளையம்ன்னு ஒரு கிராமம். அந்தக் கிராமத்துல கள்ளச்சாராயம் காய்ச்சுட்டு இருந்தவன் எப்படியோ அரசியலுக்கு வந்து தேர்தல்ல நின்னு ஜெயிச்சு எம்.எல்.ஏ.வாகி இன்னிக்கு மந்திரியும் ஆயிட்டான். நம்ம தமிழ் நாட்டுக்கு நல்ல சீஃப் மினிஸ்டர் கிடைச்சிருக்கார். அதே நேரத்துல மோசமான மந்திரிகள் கிடைச்சிருக்காங்க... செந்தாமரைக்கண்ணனை எப்படி விசாரிச்சா உண்மை வெளிவரும்ன்னு எனக்குத் தெரியும்... நான் பார்த்துக்கிறேன்..."

"தேங்க்யூ..." மாணிக்கவாசகத்துக்கு நன்றி சொல்லிவிட்டு வக்கீல் பார்த்தசாரதி அறையினின்றும் வெளியேறி டாக்டர் குமரகுருவிடம் வந்தார். சோபாவில் உட்கார்ந்திருந்த குமரகுரு கேட்டார்.

"என்ன... கமிஷனர்கிட்டே செந்தாமரைக்கண்ணனைப் பத்தி சொல்லிட்டீங்களா வக்கீல் ஸார்...?"

"சொல்லிட்டேன்..."

"என்ன சொன்னார்...?"

"கண்டிப்பா விசாரணை நடத்தறேன்னு சொல்லியிருக்கார்."

"நடத்துவாரா?"

"பார்க்கலாம்...! கமிஷ்னர் மாணிக்கவாசகம், போட்டிருக்கிற காக்கி யூனிஃபார்முக்கு மரியாதை கொடுக்கிற ரகம்."

வக்கீல் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே டாக்டரின் செல்போன் குரல் கொடுத்தது. எடுத்து காதுக்குப் பொருத்தினார்.

"ஹலோ..."

"இது சிப்ளோரிடா போலீஸ்..."

குமரகுரு பதட்டமாகி ஒரு நேர்க்கோடாய் மாறி நிமிர்ந்து உட்கார்ந்தார். "சொல்லுங்கள்... உங்களுடைய போனுக்காகத்தான் இங்கே காத்துக்கொண்டு இருக்கிறோம்..."

"காணாமல் போன மதுரா கிடைத்துவிட்டாள்."

'இனி வீட்டுக்குப் புறப்பட்டு போகலாம்!' என்று நினைத்து டி.ஜி.பி. மௌரியா நதற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்த விநாடி - அவருடைய ஹாட்லைன் டெலிபோன் கூப்பிட்டது. ரிஸீவரை எடுத்தார்.

"எஸ்..."

"ஸார்... நான் விவேக்..."

"ஓ... நீங்களா? குட்ஈவினிங் விவேக்... ஹோட்டல் சுவர்ணா இண்டர்நேஷனலுக்குப் போய் சேர்ந்துட்டீங்களா...?"

"சேர்ந்து ரெண்டு மணி நேரம் ஆச்சு ஸார்..."

"உங்களை யார்க்கும் அடையாளம் தெரியலையே...?"

"தெரியலை ஸார்..."

"என்ன... இன்வெஸ்டிகேஷனை ஸ்டார்ட் பண்ணி விட்டீர்களா?"

"இன்வெஸ்டிகேஷனை ஸ்டார்ட் பண்றதுக்கு முந்தி நீங்க எனக்குக் கொடுத்த கேஸ் ஃபைலில்



இருக்கிற தலைப்பை மாத்தணும் ஸார்..."

"என்னது...? தலைப்பை மாத்தணுமா...?"

"ஆமா ஸார்... 'ஒரு நதி. இரண்டு பௌர்ணமி, இரண்டு பெண்'ன்னு மாத்தணும் ஸார்..."

"விவேக்... நீங்க என்ன சொல்றீங்க...?"

"ஸார்...! நானும் விஷ்ணுவும் இந்த ஹோட்டலுக்கு வந்த கொஞ்ச நேரத்துக்குள்ளே இன்வெஸ்டிகேஷனை ஸ்டார்ட் பண்ணிட்டோம். போன பௌர்ணமிக்கு 44-ம் எண்ணிட்ட மரத்துக்குக் கீழே ஒரு பெண்ணோட டெட் பாடி கோணிப் பைக்குள்ளே இருந்ததாக ஃபைலில் மென்ஷன் பண்ணியிருந்தீங்க... அந்த மரம் இருக்கிற பகுதியைப் பார்த்துட்டு வர்றதுக்காக நானும் விஷ்ணுவும் புறப்பட்டோம்... கல்பாத்தி நதிக்கரையோரமா இருந்த வனப்பகுதிக்குள்ளே நுழைஞ்சு அந்த 44-ம் எண்ணிட்ட மரத்தை நெருங்கினபோது எங்களுக்கு பயங்கர ஷாக். மரத்துக்குக் கீழே ஒரு கோணிப்பை உருண்டு கிடந்தது. அதைப் பிரிச்சு பார்த்தபோது உள்ளே தலையில்லாத ஒரு பெண்ணோட உடல்..."

மௌரியாவின் சதைப்பிடிப்பான முகம் அதிர்ச்சிக்குள் விழுந்து தத்தளித்தது. "எ...ன்...னது... இன்னொரு பெண்ணின் தலையில்லாத உடலா...?"

"ஆமா... ஸார்..."

"விஷயம் வெளியே பரவிடுச்சா...?"

"இல்ல ஸார்...! நாங்க இன்னும் அந்த

மரத்துக்கிட்டதான் இருக்கோம்..."

"என்ன செய்யலாம் விவேக்...?"

"ஸார்... இது ரகசியமா நடத்தப்பட வேண்டிய கேஸ் கிடையாது... உடனடியா போலீஸ் நடவடிக்கைகள் பகிரங்கமாய் எடுக்கப்படணும். லோக்கல் போலீஸும் ஃபாரன்ஸிக் துறையும் உடனடியாய் ஸ்பாட்டுக்கு வரணும்... சில நடவடிக்கைகளை நாம் போர்க்கால அடிப்படையில் எடுத்தால்தான் கொலை செய்யப்பட்ட பெண்கள் யார்... கொலையாளிகள் யார் என்கிறதையும் கண்டு பிடிக்க முடியும்..."

"ஓ. கே. மிஸ்டர் விவேக்...! ஐ அக்ரி வித் யுவர் வேர்ட்ஸ். இனிமே ரகசிய விசாரணை வேண்டாம். லோக்கல் போலீஸுக்கு தகவல் கொடுத்திடுங்க... ஃபாரன்ஸிக் பீப்பிளை வரவழையுங்க..."

"தேங்க்யூ ஸார்...! பை... த... பை... எனக்கு இன்னொரு தகவல் வேணும்..."

"சொல்லுங்க..."

"போன பௌர்ணமி அன்னிக்கு 44-ம் எண் மரத்துக்குக் கீழே தலையில்லாத ஒரு பெண்ணின் டெட் பாடியை ஒரு கப்புள் பார்த்து தகவல் சொன்னதாக ஃபைலில் மென்ஷன் பண்ணியிருக்கீங்க... ஆனா அவங்க பேரோ முகவரியோ ஃபைலில் இல்லை..."

"ஆமா... அந்தக் கப்புள் தங்களோட பெயர், முகவரியைத் தர விரும்பலை..."

"ஆனா... அவங்க யார்... எங்கேயிருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியும்தானே...?"

"தெரியும்..."

"எனக்கு அவங்க அட்ரஸ் வேணும்... ஸார்..."

"அவங்க இந்நேரம் ஃபாரினுக்கு போயிருப்பாங்கன்னு நினைக்கிறேன்..."

"நினைக்கறீங்க... பட் ஷ்யூர் கிடையாது... ஒருவேளை அவங்க இன்னமும் ஃபாரின் புறப்பட்டு போகாமல் இருக்கலாம் இல்லையா?"

"மிஸ்டர் விவேக்...! அந்த பொண்ணோட பேரு மீரா. ஹஸ்பெண்ட் பேரு சபேஷ். சபேஷ் ஒரு கம்ப்யூட்டர் என்ஜினியர். சொந்த ஊர் கோயம்புத்தூர்."

"அட்ரஸ்..."

"நெம்பர் 69, அஷ்டலட்சுமி அவென்யூ, நடாகம் சாலை, கோவை..."

"டெலிபோன் நெம்பர்...?"

"டெலிபோன் கிடையாது. மொபைல் போன்தான். நம்பரை நோட் பண்ணிக்குங்க... 9840070711."

"ஸார்...! நீங்க அவங்களுக்கு போன் பண்ண வேண்டாம்... நானே போன் பண்ணி பேசிக்கிறேன்..."

"மறுபடியும் உங்க போனை நான் எப்போ எதிர்பார்க்கலாம்...?"

"அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே ஸார்."

# 12

டாக்டர் குமரகுருவின் முகப்பரப்பு முழுவதும் சந்தோஷ அலைகள் பரவ ஒரு சின்னக் குழந்தையாக மாறி செல்போனில் கத்தினார்.

"என்ன...! காணாமல் போன மதுரா கிடைத்துவிட்டாளா...?"

"கிடைத்துவிட்டாள்."

"எப்படி... எங்கே போயிருந்தாள்...?"

மறுமுனையில் அந்த ஃப்ளோரிடா போலீஸ் அதிகாரி ஒரு சின்ன தயக்க இடைவெளிக்குப்பின் சொன்னார்: "மதுரா இப்போது மயங்கிய நிலையில் இருக்கிறாள். அவளுடைய உடம்பில் மயக்க மருந்து ஊசி போடப்பட்டு இருப்பதால் அறவே சுயநினைவு இல்லை."

"மதுரா எங்கே இருக்கிறாள்?"

"ஃப்ளோரிடா ஹைவேஸ் ரோட்டில் 647-வது கிலோ மீட்டரில் ஒரு சாலையோர பூங்காவில் சிமெண்ட் பெஞ்ச் ஒன்றின் மீது மதுரா மயங்கிக் கிடந்தாள். அந்தப் பக்கமாய் ரோந்து போன போலீஸார் அவளைப் பார்த்துவிட்டு எங்களுக்குத் தகவல் கொடுத்தனர்... மதுரா இப்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறாள். டாக்டர்கள் சிகிச்சையளித்துக் கொண்டு இருக்கிறார்கள்."

"மதுராவின் உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"



"அவளுடைய உடல்நிலை குறித்து கவலையோ பயமோ கொள்ள வேண்டியது இல்லை... பை...த...பை... மதுராவுக்கு போதை மருந்து உட்கொள்ளும் பழக்கம் உண்டா?"

"நோ... நோ... கிடையவே கிடையாது. நான் அவளுடைய குடும்ப டாக்டர். அவளுடைய உடல் ஆரோக்கியத்தைப் பற்றி எனக்கு நல்லாவே தெரியும்... ஷி ஈஸ்... ஏ... ப்யூர் டீடோட்லர். அவளிடம் எந்தவிதமான கெட்ட பழக்கமும் கிடையாது..."

"மதுராவுக்கு போதை மருந்து உட்கொள்ளும் பழக்கம் இல்லையென்றால் அவளுடைய உடம்பில் வேறு யாரோ மயக்க மருந்தை செலுத்தியிருக்க வேண்டும். அதாவது அவள் கடத்தப்பட்டு இருக்கலாம்."

"உடம்பில் காயம் ஏதாவது இருக்கிறதா?"

"காயம் எதுவும் இல்லை...! மதுராவுக்கு என்ன நேர்ந்தது என்பது அவளுக்கு மயக்கம் தெளிந்தபின்புதான் தெரியும்..."

"நாங்கள் யாராவது ஃப்ளோரிடாவுக்கு புறப்பட்டு வரவேண்டுமா?"

"கண்டிப்பாக...! மதுராவின் அப்பாவும் அம்மாவும் உடனே புறப்பட்டு வந்தால் பரவாயில்லை..."

"மதுராவுக்கு அப்பா கிடையாது. ஐந்து வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அம்மா மட்டுமே. அவரும் இப்போதும் உயர் ரத்த

அழுத்தத்தின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்."

"அப்படியானால் ஃப்ளோரிடாவுக்கு யார் வரப்போகிறார்கள்...?"

"குடும்ப டாக்டரான நானும் வக்கீலான மிஸ்டர் பார்த்தசாரதியும் உடனே புறப்பட்டு வருகிறோம்..."

"வாருங்கள்...! நீங்கள் விமானம் பிடித்து ஃப்ளோரிடா வந்து சேர்வதற்குள் மதுராவுக்கு நினைவு திரும்பியிருக்கும். அவளுக்கு என்ன நேர்ந்தது என்பதை எங்களிடம் சொல்லியிருப்பாள்."

## 13

ஹோட்டல் சவன்னா இன்டர்நேஷனல் அந்த முன்னிரவு வேளையில் பதட்டம் நிறைந்து காணப்பட்டது.

ஒரு போலீஸ் வேன். இரண்டு ஜீப்கள். இரண்டு போலீஸ் பெட்ரோலிங் வெள்ளை நிற அம்பாசிடர் கார்கள். கறுப்பு பெயிண்ட் பூசப்பட்ட ஒரு மார்ச்சுவரி வேன். இருபதுக்கும் மேற்பட்ட போலீஸார்.

ஹோட்டலில் தங்கியிருந்த பணக்கார வர்க்கம் நைட் கவுன்களைத் தரித்துக்கொண்டு சிட்அவுட்டில் வந்து நின்றபடி போலீஸ் நடவடிக்கைகளைத் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தது.

தலையில்லாத அந்தப் பெண்ணின் உடல் ஹோட்டலுக்கு முன்புறம் இருந்த லானுக்குப் பக்கத்தில் ஃபோக்கஸ் விளக்கு வெளிச்சத்தில் கிடத்தப்பட்டு இருக்க, ஹோட்டலின் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீஸர் பிரேம்குமார் விவேக்கிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்.



"ஸார்...! செவன் ஸ்டார் அந்தஸ்து உள்ள இந்த ஹோட்டலில் தங்கியிருக்கிற எல்லோரும் பிக் - ஷாட்ஸ்! பெரிய பெரிய பிசினஸ் மேன்கள்! வெவ்வேறு மாநிலத்திலிருந்து வந்திருக்காங்க...! ஒரு இருபது பெர்சன்ட் வெளிநாட்டுக்காரங்களும் இருக்காங்க... அவங்களையெல்லாம் வெளியே வரவழைச்சு வரிசையாக நிக்க வெச்சு பாடியைப் பார்த்து அடையாளம் காட்டச் சொல்றது சரியில்லை..."

விவேக் புன்னகைத்தான்.

"இதோ பாருங்க மிஸ்டர் பிரேம்குமார்! உங்க கவலை என்னான்னு எனக்குப் புரியுது. ஹோட்டலில் தங்கியிருக்கிற பணக்கார கஸ்டமர்களுக்கெல்லாம் இந்த கொலை விவகாரம் தெரிஞ்சா பிசினஸ் பாதிக்குமேன்னு கவலைப்படறீங்க... உங்க ஹோட்டல் பிசினஸ் நல்லாயிருக்கணும்ங்கிறதுக்காக இந்தக் கொலைகளை மூடி மறைச்சு அவாய்ட் பண்ண முடியுமா? போன பௌர்ணமியன்னிக்கு நடந்த முதல் கொலையைப் பற்றி ரகசியமா விசாரணை பண்ணத்தான் வந்தோம். வந்த அன்னிக்கே ரெண்டாவது கொலை. தலைகள் இல்லாத ரெண்டு இளம் பெண்களோட உடல்கள்... இதை சாதாரண விஷயமா எடுத்துக்க முடியுமா என்ன?"

"ஸார்! எதுக்கும் இந்த ஹோட்டல் ஓனர்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு..."

"இந்த ஹோட்டலின் ஓனர் பேரு... செல்வகிருஷ்ணன்தானே...?"

"ஆமா... ஸார்..."

"லுக் மிஸ்டர் பிரேம்குமார்! இந்த ரெண்டு கொலை சம்பவங்களையும் பகிரங்கமா இன்வெஸ்டிகேட் பண்ணச் சொல்லி டி.ஜி.பி. மௌரியாவே இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துட்டார். இந்த ஹோட்டலில் தங்கியிருக்கிற கஸ்டமர்ஸ் மட்டும் இல்லை... நீங்களும் இந்த இன்வெஸ்டிகேஷனுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கணும். எல்லாத்துக்கும் மேலா ஹோட்டலோட ஓனர் செல்வகிருஷ்ணனும் இங்கே வரணும்.. பாடியைப் பார்க்கணும்... பாடி அடையாளம் தெரிஞ்சா யார்ன்னு சொல்லணும்..."

"ஸார் வந்து.."

"டோண்ட் ஆர்க்யூ பிரேம்குமார்...! ஹோட்டல் அறைகளில் தங்கியிருக்கிற எல்லா கஸ்டமர்களுக்கும் தகவல் கொடுத்து வெளியே வரச் சொல்லுங்க... ம்... போங்க.."

பிரேம்குமார் வியர்த்த முகமாய், தயக்க நடையோடு ஹோட்டலின் வரவேற்பறையை நோக்கி போக, கொஞ்சம் தள்ளி நின்றிருந்த விஷ்ணு பக்கத்தில் வந்தான்.

"பாஸ்...!"

"என்ன...?"



"அந்த மீராவோட செல்போன் நம்பர்க்கு ட்ரை பண்ணி பண்ணி வலது கை ஆட்காட்டி விரல் ஒரு பத்து பர்ஸண்ட் தேய்ஞ்சு போச்சு பாஸ்... நோ ரெஸ்பான்ஸ்."

"செல்போன் என்ன சொல்லுது..?"

"ஊமை..."

"சரி, நீ புறப்படு."

"எங்கே பாஸ்?"

"கோயமுத்தூர்க்கு! மீராவோட அட்ரஸுக்குப் போய் நேர்லயே பார்த்துடு..."

"பாஸ்...! உங்களுக்கு அந்த மீரா - சபேஷ் மேல சந்தேகம் இருக்கா?"

"கொஞ்சம்..."

"எப்ப புறப்படணும் பாஸ்?"

"இப்பவே...!"

"எஸ்... பாஸ்..." விஷ்ணு நகர்ந்து போக ஃபாரன்ஸிக் ஆபீஸர் ஒருவர் பக்கத்தில் வந்தார்.

"ஸார்... பாடியோட எக்ஸ்டர்னல் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் ரெடி..."

"சொல்லுங்க... எனி க்ளூஸ்?"

"கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு வயது 30லிருந்து 35க்குள் இருக்கணும் ஸார். கொலை நடந்து 72 மணி நேரம் அதாவது மூன்று நாட்கள் ஆகியிருக்கணும்..."

"மரணம் எப்படி?"

"அதுதான் குழப்பமாய் இருக்கு ஸார்."

"என்ன குழப்பம்?"

"கொலை செய்யப்பட்ட பெண்ணோட உடம்பில் எந்த ஒரு ஆயுதப் பிரயோகமும் இல்லை. எந்த காயங்களும் இல்லை... ஏதாவது பாய்ஸன் கொடுத்து கொலை செய்யப்பட்டு இருக்கலாம். அதுக்கப்புறம் கழுத்தை அறுத்து தலையை வெட்டி எடுத்து இருக்கலாம் ஸார். பாடியை ஒரு முழுமையான போஸ்ட்மார்ட்டத்துக்கு உட்படுத்தினால் மரணத்துக்கான காரணம் தெரியும்..."

"சாக்கு மூட்டையின் மேல் ஃபிங்கர் பிரிண்ட்ஸ் ஏதாவது...?"

"நாட்-ஃபவுண்ட்..." ஃபாரன்ஸிக் ஆபீஸர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - பிரேம்குமார் பக்கத்தில் வந்தார்.

"ஸார்! ஹோட்டல் அறைகளில் தங்கியிருந்த எல்லார்க்கும் தகவல் கொடுத்துட்டேன். வந்துட்டிருக்காங்க."

"மொத்தம் எத்தனை பேர்?"

"124 பேர் ஸார்..."

"இதுல ஃபாரினர்ஸ் எத்தனை பேர்?"

"27 பேர்."

"லேடீஸ்...?"

"41 பேர் ஸார்..."

"உங்க ஒத்துழைப்புக்கு ரொம்பவும் நன்றி



பிரேம்குமார். அப்படியே [...] பனிரெண்டு எனக்கு நீங்க இன்னொ[...] வைத்துப் பண்ணணும்."

"சொல்லுங்க ஸார்..."

"ஃபாரன்ஸிக் ரி[...] கொலை செய்யப்பட்டு [...] மே ஸா மூணு நாளைக்கு [...] ஹோட்டலிலிருந்து அறைக[...] பண்ணிட்டு போனவங்களோட பேரும் [...] வேணும்."

"ஸ..ஸார்..." பிரேம்குமார் தயங்கினார்.

"என்ன? மூணு நாளைக்கு முன்னாடி யாராவது வி.ஐ.பி.க்கள் வந்து தங்கினாங்களா? இப்படி குரலை இழுக்கறீங்க...?"

"ஆமா... ஸார்..."

"யார் அவங்க?"

"ஆளும் கட்சி எம்.எல்.ஏ..க்கள் ஸார். மொத்தம் 46 பேர் வந்து ரூம் எடுத்து தங்கியிருந்தாங்க...!"

"எத்தனை நாள் ஸ்டே...?"

"ரெண்டு நாள்... ஸார்! நேற்றைக்கு முந்தின நாள் ராத்திரிதான் காலி பண்ணினாங்க..."

"எதுக்காக வந்து தங்கினாங்கன்னு தெரியுமா...?"

"வருஷத்துல ஒருநாள் இப்படி வந்து தங்குவாங்க ஸார். ஒரு மந்திரியோட ஆதரவாளர்கள் அந்த 46 எம்.எல்.ஏ..க்கள்."

விவேக் உஷாரானான்.

"அந்த 46 எம்.எல்.ஏ.க்களுக்கும் எல்லா சப்ளையும் இருந்ததா?"

"அது... வந்து...!"

"இதோ பாருங்க மிஸ்டர் பிரேம்குமார்! நீங்க இனிமே எதையும் மறைக்கக்கூடாது. மறைச்சா கொலையாளியைப் பிடிக்க முடியாது..."

"எல்லா சப்ளையும் இருந்தது. கேரளா, கர்நாடகாவில் இருந்து பெண்கள் வரவழைக்கப்பட்டு இருந்தாங்க... விடிய விடிய கூத்தும் கும்மாளமுமா இருந்துட்டு மாலையில் ஆறு மணிக்கெல்லாம் புறப்பட்டு போயிட்டாங்க."

"இந்த ஹோட்டலில் வந்து எம்.எல்.ஏ.க்களோடு ரெண்டு மூணு நாள் தங்கின பெண்கள்ல யாராவது காணாம போயிட்டதா உங்களுக்கு தகவல் வந்ததா?"

"அப்படி எந்த தகவலும் வரலை ஸார்...!"

"அந்த 46 எம்.எல்.ஏ.க்களும் எந்த மந்திரியோட ஆதரவாளர்கள்னு தெரியுமா?"

"தெரியும் ஸார்...!"

"யாரு?"

"மந்திரி அன்புக்கரசன்! ஸார்...! இந்தத் தகவலை நான்தான் உங்ககிட்ட சொன்னேன்னு வெளியே யார்கிட்டயும் சொல்லிடாதீங்க. வேலை போனாலும் பரவாயில்லை ஸார்! என் உயிரே போயிடும்... ஸார்!"



"பயப்படாமே உங்க வேலையைப் போய் பாருங்க. நான் கூப்பிடும்போது வந்து நான் கேட்கிற கேள்விகளுக்கு ஒழுங்கா பதிலைச் சொன்னாப் போதும்..."

பிரேம்குமார் தலையாட்டிவிட்டு போக, விவேக் ஃபாரன்ஸிக் ஆபீசரிடம் வந்தான்.

"உங்க வேலை முடிந்ததா?"

"முடிந்தது ஸார்...!"

"கொலை செய்யப்பட்ட பெண்ணோட ப்ளட் க்ரூப் என்னான்னு பார்த்தீங்களா?"

"பார்த்தேன் ஸார்! பி-ஒன் பாஸிட்டிவ்."

"டெட்பாடி இருந்த கோணிப்பையின் மேல் ரத்தக்கறைகள் இருந்தது. அதையும் சோதனை செய்து பார்த்தீர்களா?"

"பார்த்தேன் ஸார்!"

" அது என்ன க்ரூப்?"

"அதுவும் பி-ஒன் பாஸிட்டிவ்தான் ஸார்...!"

"ஆர்...யூ ஷ்யூர்...?"

"செண்ட் பர்ஸண்ட் ஷ்யூர் ஸார்?"

"எனக்கு ஒரு சின்ன சந்தேகம். கேட்கலாமா?"

"ப்ளீஸ் ஸார்."

விவேக் அந்த சின்ன சந்தேகத்தை கேட்டான். ஃபாரன்ஸிக் ஆபீஸரின் முகம் ஒரு பெரிய அதிர்ச்சிக்குப் போயிற்று.

"ஸ... ஸார்! இந்த பாயிண்ட்டை நான்

யோசிக்கவே இல்லை..."

"இப்ப யோசியுங்க...!"

## 14

மீனம்பாக்கம் ஏர்போர்ட்.

விமானத்திலிருந்து இறங்கி லௌன்ஞ்சுக்குள் நுழைந்த டாக்டர் குமரகுரு, லாயர் பார்த்தசாரதி, மதுரா - மூன்று பேர்களையும் பத்திரிகை நிருபர்கள் குபீரென்று சூழ்ந்து கொண்டார்கள்.

கேள்விகள் பறந்தன.

"ஸார்! மதுராவைக் கடத்திக்கொண்டு போனது யார் என்கிற விபரம் தெரிந்ததா?"

"கடத்தல்காரர்களைப் பிடித்துவிட்டார்களா?"

"இந்தக் கடத்தல்காரனுக்கு காரணம் அரசியலா அல்லது தனிப்பட்ட மனிதர்களின் காழ்ப்புணர்ச்சியா?"

"மதுரா கடத்தப்பட்ட விவகாரத்தில் ஒரு தமிழ்நாட்டு மந்திரி சம்பந்தப்பட்டிருப்பதாக ஒரு ஆங்கில பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அது உண்மையா?"

லாயர் பார்த்தசாரதி எல்லா பத்திரிகை நிருபர்களையும் பார்த்து கையெடுத்து கும்பிட்டார்.

"நாங்கள் இப்போதுதான் ஃப்ளோரிடாவிலிருந்து திரும்பியிருக்கோம். இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது. ரெண்டு



நாள் போகட்டும்... வழி விடுங்கள்... பனிரெண்டு மணிநேர பயண அசதி உடம்பை துவைத்துப் போட்டிருக்கிற. முதலில் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுக்க வேண்டும்."

மதுரா குறுக்கிட்டாள்.

"அங்கிள்...! எந்த ஒரு விஷயத்தையுமே தெரிஞ்சுக்க பிரஸ் பீப்பிள் ஆர்வம் காட்றது சகஜம். ஃப்ளோரிடாவில் எனக்கு என்ன நேர்ந்ததுன்னு தெரிஞ்சுக்க விரும்பறாங்க...! உள்ளதை உள்ளபடி சொல்லிடலாம்... அவங்க கேள்வி கேட்கட்டும். நானே பதில் சொல்றேன்...!"

"தேங்க்யூ மேடம்!" பத்திரிகை நிருபர்கள் கை தட்டினார்கள். கேள்விகள் புதிய வேகத்தோடு வந்தன.

"மேடம்...! நீங்க எப்படி கடத்தப்பட்டீங்க?"

"அது ஒரு எதிர்பாராத சம்பவம்! ஃப்ளோரிடா ஹைவேஸ் ரோட்டில் இருந்த ஒரு ரெஸ்டாரெண்டில் சாப்ட்டுட்டு வெளியே வந்தேன். கொஞ்சம் தள்ளி டாக்ஸி ஸ்டாண்ட் இருந்தது. ஒரு டாக்ஸியைப் பிடிக்கிறதுக்காக நடந்தபோது எனக்குப் பக்கத்துல வேகமா ஒரு கார் வந்து நின்னது. அது யாரோட கார்ன்னு பார்க்கிறதுக்குள்ளே என் முகத்து மேல ஏதோ ஒரு திரவம் பீய்ச்சப்பட்டது. அடுத்த விநாடியே மயக்கமாயிட்டேன். அதுக்கு பின்னாடி என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது. மறுபடியும் கண்விழிக்கும்போது நான் ஹாஸ்பிடலில் இருக்கிறதை உணர்ந்தேன்."

"மிஸ். மதுரா! நீங்க கடத்தப்பட்டு 72 மணி நேரம் கழிச்சு ரோட்டோர பார்க்கில் நினைவு இல்லாம கிடந்தபோதுதான் போலீசார் உங்களைப் பார்த்து இருக்காங்க... இல்லையா?"

"ஆமா...!"

"கடத்திக்கொண்டு போனவர்களின் நோக்கம் என்ன?"

"எனக்கு விபத்து நேர்ந்து நான் இறந்து போயிட்டதாகத் தகவல் அனுப்பி அதன் மூலமா என்னோட அம்மாவை டார்ச்சர் பண்ணியிருக்காங்க..."

"அதுல அவங்களுக்கு என்ன லாபம்?"

"எனக்குத் தெரியலை... நானும் என்னுடைய அம்மாவும் யார்க்கும் எந்த தீங்கும் பண்ணியதில்லை. அம்மா இன்னிக்கு ஒரு உயர்ந்த பதவியில் இருக்காங்கன்னா அதுக்கு காரணம் அம்மாவோட உழைப்பும் படிப்பும்தான்."

"நீங்க ஒரு பெரிய இடத்துக்கு மருகமளா வாழ்க்கைப்படப் போறீங்க. இது பிடிக்காத யாரோ பண்ணிய காரணமாகக்கூட இருக்கலாம் இல்லையா?"

"மே...பி..."

"உங்களுடைய அடுத்தக் கட்ட நடவடிக்கை என்ன?"

"நான் இதை சும்மா விடப்போறதில்லை. என் வாழ்க்கையோடு விளையாடின அவங்க யார்னு ஃப்ளோரிடா போலீஸ் உதவியோடு கண்டுபிடிச்சு



சட்டத்துக்கு முன்னாடி நிறுத்தப் போறேன். இதுக்கு என்னுடைய வருங்கால கணவரும் உறுதுணையாய் இருக்கப் போறதா சொல்லிட்டார்."

"உங்க கல்யாணம் திட்டமிட்டபடி நடக்குமா?"

"அதிலென்ன சந்தேகம்? அதோ என்னை வரவேற்கிறதுக்காக என்னுடைய வருங்கால கணவரும் மாமனாரும் கையில் மாலைகளோடு வந்திருக்காங்க...!"

"உங்க மதர் உடல்நிலை இப்போ எப்படியிருக்கு?"

"நான் உயிரோடு இருக்கேன்னு தெரிஞ்சதுமே அவங்க பழைய ஆரோக்யத்துக்கு வந்துட்டாங்க... இருந்தாலும் இன்னும் ரெண்டு நாள் ஹாஸ்பிட்டல்ல இருக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார்."

மதுரா பேட்டியை முடித்துக்கொண்டு கொஞ்சம் தள்ளி நின்றிருந்த புவன் ஷர்மாவிடமும், ஹரி பிரசாத்திடமும் வந்தாள்.

"மாமா...!"

புவன் ஷர்மாவின் கால்களில் விழுந்தாள். அவர் அவளுடைய தோள்களைப் பிடித்து மெல்லத் தூக்கினார்.

"இனிமே உனக்கு எந்தக் கஷ்டமும் வராதும்மா... உன்னை இப்படி கண் நிறைய பார்க்கிறது மனசுக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருக்கு...!"

ஹரி பிரசாத் மதுராவின் கழுத்தில் மாலையைப் போட்டான். "வெல்கம்... மதுரா...!"

மதுரா சிரித்தாள்.

"ரொம்பவும் பயந்து போயிட்டீங்களா?"

"பின்னே...?"

"மூணே நாளில் ரொம்பவும் இளைச்சுப் போயிட்டீங்க!"

"நீதான் வந்துட்டியே... இனி உடம்பு தேறிடும்...!"

ஹரி பிரசாத் சொல்ல பத்திரிகை நிருபர்கள் சிரித்தார்கள். போட்டோ ஃப்ளாஷ்கள் நூற்றுக்கணக்கில் மின்னின.

## 15

ஜி.ஹெச்.

டாக்டர் பரிமளகாந்தன், தன் கையில் வைத்திருந்த போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை விவேக்கிடம் நீட்டினார்.

"ரிப்போர்ட்டைப் படிங்க மிஸ்டர் விவேக். படிச்சுட்டு உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க!"

இரண்டே நிமிஷங்களில் விவேக் ரிப்போர்ட்டைப் படித்துவிட்டு டாக்டரிடம் நிமிர்ந்தான்.

"டாக்டர் இது கொலையா?"

பரிமளகாந்தன் சிரித்தார்.



"என்ன மிஸ்டர் விவேக்? பெண்ணோட தலையையே வெட்டி எடுத்திருக்காங்க. கொலையில்லாமல் இது வேறு என்ன?"

"மரணம் எப்படி?"

"கழுத்தை நேரிடையாவே அறுத்து இருக்காங்க! உடம்போட வேற எந்த பாகத்திலும் கத்திக்குத்தோ வேறு காயமோ இல்லை. வயிற்றுக்குள்ளே பாய்ஸன் கலந்த உணவுப் பொருளும் இல்லை."

"டாக்டர்! போன பௌர்ணமியில கொலை செய்யப்பட்ட பெண்ணும், இந்த பௌர்ணமியில் கொலை செய்யப்பட்ட பெண்ணும் ஒரே மாதிரிதான் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இல்லையா?"

"ஆமா.. நோ டவுட்!"

"கொலைகளுக்கான மோட்டீவ் என்னவாக இருக்கும்னு நினைக்கிறீங்க?"

"என்னோட அஸ்ஸெம்ஷனை சொல்லட்டுமா மிஸ்டர் விவேக்!"

"சொல்லுங்க..."

"இது ஏதோ நரபலி விவகாரம். மக்களோட மூடநம்பிக்கைகளுக்குத்தான் வரைமுறையே இல்லையே... பௌர்ணமியிலும் அமாவாசையிலும் கன்னிப்பெண்களை பலி கொடுத்தா புதையல் கிடைக்கும்னு எந்த ஜோசியக்காரனாவது சொல்லியிருப்பான். அதுதான் இந்த தொடர் கொலைகள். அடுத்த பௌர்ணமிக்கும் மூணாவதா தலையில்லாமே ஒ ரு பெண்ணோட டெட்பாடி கிடைக்கலாம்."

"ஸாரி டாக்டர்! இது நரபலி விவகாரம் கிடையாது."

"எப்படி சொல்றீங்க?"

"பொதுவா நரபலின்னா அமாவாசையன்னிக்கோ, பௌர்ணமியன்னிக்கோதானே பலி கொடுப்பாங்க...?"

"ஆமா...!"

"ஆனா நமக்கு கிடைச்ச ரெண்டு பெண் சடலங்களும் பௌர்ணமி வர மூணுநாள் இருக்கும்போதே கொலை செய்யப்பட்டிருக்காங்க. ஸோ இது நரபலியாய் இருக்கமுடியாது. ஹோட்டல் சுவர்ணா இண்டர்நேஷனலில்தான் ஏதோ தப்புக் காரியம் நடக்குதுன்னு நினைக்கிறேன்."

விவேக் பாக்கெட்டில் செல்போன் வைபரேஷனில் கூப்பிட்டது.

மறுமுனையில் கோயம்புத்தூரிலிருந்து விஷ்ணு.

"பாஸ்!"

"என்ன மீரா - சபேஷ் ரெண்டு பேரையும் மீட் பண்ணினியா?"

"இல்ல பாஸ்..."

"ரெண்டு பேரும் ஃபாரின் போயிட்டாங்களா?"

"அதுவும் இல்ல பாஸ்!"

"பின்னே..?"



"அவங்க அட்ரஸை ஒரு தடவை சொல்லுங்க பாஸ்."

"69, அஷ்டலட்சுமி அவென்யூ, தடாகம் சாலை, கோவை."

"அப்படியொரு அட்ரஸே இந்த ஏரியாவில் இல்ல பாஸ்...!"

"ஸோ... ஏமாத்தியிருக்காங்க?"

"செமத்தியா...!"

"அப்படீன்னா தப்பு அவங்ககிட்டயிருந்துதான் ஆரம்பமாகியிருக்கு..."

"ஒண்ணும் ஒண்ணும் ரெண்டுங்கிறது எவ்வளவு சரியோ அவ்வளவு சரி நீங்க சொன்னது பாஸ்."

"சரி...! நீ கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டு உடனே மெட்ராஸுக்கு வந்துரு."

"புறப்பட்டுட்டேன் பாஸ்...!"

"சீக்கிரம் வாடா.. உனக்கு இங்கே ஒரு முக்கியமான வேலை காத்திட்டிருக்கு."

"கேஸ் எவ்வளவு தூரத்தில் இருக்கு பாஸ்..."

"கை தட்டி கூப்பிடற தூரத்துலதான் இருக்கு... நீ வா! ரெண்டு பேரும் சேர்ந்து கை தட்டினா 'என்ன ஸார் கூப்பிட்டீங்களா'ன்னு கேஸ் திரும்பிப் பார்த்துடும்.

"எப்படி பாஸ்... கேஸ்ல இவ்வளவு இம்ப்ரூவ்மெண்ட்?"

"நீ பக்கத்துல இல்லைன்னாலே என்னோட

மூளை வேலை செய்யுதுடா...!"

"பா... பாஸ்...!"

"அழாதே! வந்து சேரு...!"

செல்போனை அணைத்தான் விவேக்.

## 16

"என்னை நம்புங்க தலைவரே! நான் எந்த தப்பும் பண்ணலை!"

இடம்: முதலமைச்சர் சத்திய நாராயணனின் வீடு.

சோபாவில் சத்தியநாராயணன் கோபமாய் சாய்ந்திருக்க, எதிர் சோபாவில் மங்கையர்க்கரசி. பக்கத்தில் மதுரா. இவர்களுக்கு எதிரே அமைச்சர் செந்தாமரைகண்ணன் கண்களில் நிஜமான கண்ணீரோடு கெஞ்சிக் கொண்டிருந்தார்.

"தலைவரே! மங்கையர்க்கரசியம்மா எனக்கு கூடப்பொறந்த சகோதரி மாதிரி! அவங்க பொண்ணு மதுராவை எம் பையன் சேரலாதனுக்கு கல்யாணம் பண்ணி வைக்க நினைச்சேன். அதுக்காக மீடியேட்டர் ஒருத்தரை அவங்ககிட்டே அனுப்பிவெச்சேன். மங்கையர்க்கரசி அம்மாவுக்கு தன் பொண்ணை என்னோட பையனுக்கு கல்யாணம் பண்ணிவைக்க இஷ்டமில்லைன்னு தெரிஞ்சதும் விலகிட்டேன்."

"நிஜமாவா?"



"என்னோட பெண்டாட்டி, பிள்ளை மேல சத்தியம் தலைவரே! அரசியல் எனக்கு பிடிக்காதவங்களை ஒழிச்சுக்கட்ட நான் என்ன வேணும்னாலும் செய்வேன். ஆனா, ஒரு பொண்ணோட வாழ்க்கையில் விளையாட மாட்டேன் தலைவரே!"

"அப்படின்னு நீ சொல்றே! ஆனா, எல்லாப் பத்திரிகைகளும் நீதானே குற்றவாளி என்கிற மாதிரி எழுதியிருக்கு... எதிர்கட்சிகாரனெல்லாம் ஏதோ தீபாவளி வந்துட்ட மாதிரி சந்தோஷப்படறான்."

"இதெல்லாம் எதிர்க்கட்சிக்காரங்க வேலை தலைவரே! உங்க பாசறையில் வளர்ந்தவன் நான். பெண்கள்கிட்ட எப்படி நடந்துக்கணும்னு எனக்குத் தெரியாதா?"

முதலமைச்சர் சத்தியநாராயணன் மங்கையர்க்கரசியை ஏறிட்டார்.

"இதோ பாருங்கம்மா! செந்தாமரைக்கண்ணன் என் முன்னாடி பொய் பேசமாட்டான். தப்பு பண்ணியிருந்தா கண்டிப்பா ஒத்துக்குவான். உங்க மகளை மருமகளாக்கிக்கணும்னு ஆசைப்பட்டிருக்கான். நீங்க இல்லைன்னு சொன்னதுமே அந்தப் பிரச்னையை அதோட விட்டுட்டான். உங்க பொண்ணு கடத்தப்பட்டதுக்கும் செந்தாமரைக்கண்ணனுக்கும் எந்த தொடர்பும் இருக்காதுன்னு நான் நம்பறேன். பொண்ணு

அழகாயிருக்கிறதுனால வெளிநாட்டுக்காரங்களே யாராவது கடத்தியிருக்கலாம். அமெரிக்க போலீஸ் கெட்டிக்காரங்க... எப்படியும் ஆட்களை கண்டுபிடிச்சுடுவாங்க... நீங்க நடந்ததையெல்லாம் ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துட்டு கல்யாண வேலைகளை போய் கவனிங்க. உடம்பையும் பத்திரமா பார்த்துக்குங்க. இந்த ஒரு வாரத்துல உடம்பு பாதியாகி கறுத்துப் போயிட்டீங்க! இதோ பாரம்மா மதுரா!"

"ஸார்!" மதுரா எழுந்து நின்றாள்.

"அம்மாவுக்கு நீதான் சொல்லணும்... எல்லாத்தையும் மறந்துட்டு போய் கல்யாண காரியங்களை கவனிங்க."

"சரி ஸார்...!" தலையாட்டிய மதுரா அம்மாவின் தோளைத் தொட்டாள்.

"வாம்மா போகலாம்..."

மங்கையர்க்கரசி செந்தாமரைக்கண்ணனை முறைத்து பார்த்தபடி எழுந்தாள்.

"நீ தப்பு பண்ணியிருந்தா கடவுள் உன்னை தண்டிக்காமே விடமாட்டார்."

"அம்மா! என்னை நம்புங்கம்மா... நான் எந்த தப்பும் பண்ணலை!" செந்தாமரைக்கண்ணன் சொன்னதை பொருட்படுத்தாமல் மங்கையர்க்கரசியும் மதுராவும் அறையைவிட்டு வெளியேறினார்கள்.

இண்டர்காம் ஒலித்தது.

சத்தியநாராயணன் எடுத்தார். பி.ஏ. பேசினார்.



"ஸார்! டி.ஜி.பி மௌரியா உங்களைப் பார்க்கறதுக்காக வந்து வெயிட் பண்ணிட்டிருக்கார். உள்ளே அனுப்பட்டுமா... இல்லை கோட்டைக்கு வரச் சொல்லட்டுமா?"

"உள்ளே அனுப்பு... விஷயம் முக்கியமானதாக இருக்க போய்த்தான் அவர் வீட்டுக்கு வந்திருக்கார். அவரோட வேற யாராவது வந்திருக்காங்களா?"

"இல்ல ஸார்... அவர் மட்டுந்தான்..."

"அனுப்பு..." - சொல்லிவிட்டு செந்தாமரைக்கண்ணனை ஏறிட்டார்.

"நீ கிளம்பு."

"தலைவரே! நான் எந்த தப்பும்..."

"எனக்குத் தெரியும்... நீ போய்யா!"

செந்தாமரைக்கண்ணன் வெளியேறிப் போக, டி.ஜி.பி. மௌரியா உள்ளே வந்தார். சத்தியநாராயணன் எதிர் சோபாவைக் காட்டினார்.

"உட்காருங்க மௌரியா..."

மௌரியா உட்கார்ந்தார்.

"என்ன விஷயம்?"

"கல்பாத்தி நதிக்கரையோரமாய் ரெண்டாவதாய் கிடைச்ச பாடி பெரிய பிரச்னையா மாறும் போலிருக்கு ஸார்! எல்லாப் பத்திரிகைகளும் இந்த நியூஸை ஹைலைட் பண்ணிட்டாங்க.."

"விவேக் ரகசியமா இந்த கேஸை இன்வெஸ்டிகேட் பண்ணிகிட்டிருந்தாரே?"

"முதல் பாடியைப் பத்தி ரகசியமா இன்வெஸ்டிகேட் பண்ண நான்தான் விவேக்கையும் விஷ்ணுவையும் அனுப்பி வெச்சேன் ஸார். பட் ரெண்டாவதா ஒரு பெண்ணோட டெட்பாடி கிடைச்சதும் விவேக் பகிரங்க விசாரணைக்கு வந்துட்டார். இன்னிக்கு வந்த தினச் சூரியன் பத்திரிகை பார்த்தீங்களா ஸார்?"

"இல்லை!"

"பாருங்க..." - மௌரியா தன் கையோடு கொண்டு போயிருந்த அந்த தினசரி பத்திரிகையை காட்டினார். அதில்

மூன்றாவது பௌர்ணமிக்கும் டெட்பாடி கிடைக்குமா? திகிலில் கல்பாத்தி நதிக்கரையோரம்.

செய்தியைப் படித்த சத்தியநாராயணனின் முகம் ஒரு கல்லைப்போல் இறுகியது.

## 17

கல்பாத்தி நதியையொட்டிய மண்பாதையில் விவேக் பைக்கை விரட்டிக் கொண்டிருக்க பின்சீட்டில் விஷ்ணு.

"பாஸ்..."

"ம்."

"இப்போ எங்கே போய்கிட்டிருக்கோம்."



"ஒரு வி.ஐ.பி. வீட்டுக்கு."

"பாஸ் ரெண்டு நாளா உங்க நடவடிக்கைகள் எல்லாமே ஹிட்ச்காக் பாணியில் மர்மமாயிருக்கு. எதுவுமே புரியலை?"

"சீக்கிரம் புரியும்!"

பைக் ஒரு குறுகலான ஒற்றையடிப் பாதையில் திரும்பியது. இரு பக்கத்திலும் அடர்த்தியான மரங்கள். ஒரு மரத்தில் பெயர்ப்பலகை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

குடல் வாங்கி மாரியம்மன் கோயிலுக்கு போகும் வழி.

2 கி.மீ.

ஒற்றையடிப் பாதையில் ஐந்து நிமிடம் பயணம்.

ஒரு குடிசைக் கோவில் ஹரிக்கேன் விளக்கு வெளிச்சத்தோடு பார்வைக்கு கிடைத்தது. கோயில் வாசலில் பைக்கை நிறுத்தினான் விவேக்.

"என்ன பாஸ் யாரையும் காணோம்."

"வா உள்ளே போய் பார்க்கலாம்."

கோயில் தூணுக்கு சாய்ந்து கொண்டு அந்த கிழவி தெரிந்தாள். "உங்களுக்கு யார் வேணும்?"

"பூசாரி ஜக்கய்யன்"

"இப்ப வந்துடுவார். ஏதாவது பலி பூசை

பண்ணனுமா?"

"அதெல்லாம் இல்லை. அவரைப் பார்த்து பேசணும்."

"அப்படீன்னா இதே வழியில் ஆத்துக்கு போங்க. பூசாரியைப் பார்க்கலாம்."

"பாஸ்! இந்த பூசாரி ஜக்கய்யன்தனான் நீங்க பார்க்க வந்த வி.ஐ.பி.யா?"

"இல்ல இன்னொருத்தர்."

"குழப்பறீங்களே பாஸ்!" பின்னந்தலையை பிறாண்டிக் கொண்டான் விஷ்ணு.

# 18

"அம்மா!"

கண்களை மூடியிருந்த மங்கையர்க்கரசி, மதுராவின் குரல் கேட்டு திரும்பினாள்.

"என்ன மதுரா?"

"உன்னை பார்க்கிறதுக்காக மாப்பிள்ளையும் மாப்பிள்ளையோட அப்பாவும் வந்திருக்காங்க."

"ராத்திரி பத்தாகப் போகுது. இந்த நேரத்துல எதுக்காக வந்திருக்காங்க."

"தெரியலேம்மா...!"

மங்கையர்க்கரசி எழுந்து ஹாலுக்கு போனாள்.



புவன் ஷர்மாவும் ஹரிபிரசாத்தும் எழுந்தார்கள்.

"வணக்கம்."

"வணக்கம். வாங்க."

"ஒரு பத்து நிமிசம் உங்ககிட்ட பேசணும்."

"பேசலாமே..."

"இன்னிக்கு எனக்கு ஒரு லெட்டர் வந்தது. அந்தக் லெட்டரை நீங்களும் படிச்சுப் பார்க்கணும்."

"என்ன லெட்டர் அது?"

அவள் வாங்கி பிரித்து படிக்க ஆரம்பித்தாள்.

அன்புள்ள புவன் ஷர்மா அவர்களுக்கு வணக்கம்!

உங்களுக்கு மருமகளா வரப் போகிற மதுரா வெளிநாட்டில் யாரோவால் கடத்தப்பட்டாள். ஆனால் அவளுடைய கற்புக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று டாக்டர்கள் ரிப்போர்ட் கொடுத்துள்ளார்கள். இது உங்களையும் உங்கள் மகனையும் ஏமாற்றுவதற்காக கொடுக்கப்பட்ட ரிப்போர்ட். மதுரா கற்பழிக்கப்பட்டாளா இல்லையா என்பதை நீங்களும் உங்கள் மகனும் உறுதிப்படுத்திக்கொள்ள இங்குள்ள பெண் டாக்டர் ஒருவரிடம் வெர்ஜின் டெஸ்ட் ஏன் செய்து கொள்ளக்கூடாது? மதுராவும் ஹரிபிரசாத்தும் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பே இப்படிப்பட்ட பிரச்னைகளில் இருந்து விடுபட்டு தெளிவுபெற வேண்டியது முக்கியம்.

இப்படிக்கு

நலம்விரும்பி!

கடிதத்தைப் படித்து முடித்த மங்கையர்க்கரசி வியர்த்துப் போயிருந்தாள்.

அம்மாவின் முகத்தை பார்த்த மதுரா அந்தக் கடிதத்தை அவள் கையிலிருந்து பறித்து படித்தாள்.

"இந்தக் கடிதம் எப்ப வந்தது?"

"இன்னிக்கு மத்தியானம்!"

"கடிதத்தை கிழிச்சு போடாம எதுக்காக இங்கே கொண்டு வந்து காட்டணும்."

ஹரிபிரசாத் குறுக்கிட்டான். "நான் வேண்டாம்னுதான் சொன்னேன் மதுரா. அப்பாதான் கேட்கலை."

"டாக்டர்கள் என்னைப் பத்தி கொடுத்த வெர்ஜின் ரிப்போர்ட்டை நீங்க நம்பலை?"

"அதுக்கு அப்படியில்லேம்மா அர்த்தம்?"

"பின்னே வேற எப்படி. உங்களுக்கு என்மேல நம்பிக்கையிருந்தா இந்த கடிதத்தை ஒரு பெரிய விஷயமா எடுத்துக்கிட்டு அம்மாவை பார்க்க வந்திருக்க மாட்டீங்க. அதை கிழிச்சு போட்டுட்டு வேற வேலையைப் பார்க்க போயிருப்பீங்க..."

"அது வந்தும்மா..."

"ஸாரி மிஸ்டர் புவன் ஷர்மா. ஒரு மொட்டை



கடிதத்துக்கு மதிப்பு கொடுத்து அதைப் பத்தி பேச வந்த உங்களைப் பார்க்கவே வெறுப்பாயிருக்கு. கெட் லாஸ்ட்."

ஹரிபிரசாத் சீறிக்கொண்டு முன்னால் வந்தான். "என்ன நீ பாட்டுக்கு பேசிகிட்டே போறே! ஒரு லெட்டரைக் கொண்டு வந்து காட்டினதுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணணுமா? பெரியவங்களுக்கு மரியாதை கொடுத்துப் பேசு..."

"மரியாதை யாருக்கு தரணும், யாருக்குத் தரக்கூடாதுன்னு எனக்குத் தெரியும். கல்யாணத்துக்கு முன்னாடியே உங்களை எனக்கு புரிய வைச்ச அந்த ஆண்டவனுக்கு நன்றி. போங்க ஒரு கற்புள்ள பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்குங்க..."

"ஒரு பொண்ணு மாதிரியா நீ பேசறே! ராட்சசி!"

"நான் ராட்சசிதான்! போடா வெளியே!" மதுரா வாசலை நோக்கி ஆட்காட்டி விரலைக் காட்ட, மங்கையர்க்கரசி நெஞ்சைப் பிடித்து கொண்டு மயங்கி விழுந்தாள்.

## 19

விவேக்கும் விஷ்ணுவும் ஒற்றையடிப் பாதையில் நடந்தார்கள். எதிரில் அந்த ஐம்பது வயது நபர் எதிர்படவும் நின்றார்கள்.

"பூசாரி ஜக்கய்யன்?"

"நான்தான்."

"பாவாடைசாமியோட வீட்டு அட்ரஸ் வேணும்."

"இதே ஆத்தோரம் ஒரு கிலோ மீட்டர் போனா மயானம் வரும். அதை தாண்டினா குருதியூர் கிராமம். யாரைக் கேட்டாலும் வீட்டை காட்டுவாங்க."

"ரொம்ப நன்றிங்க."

"பாஸ்! அந்த பாவாடைசாமிதான் நீங்க சொன்ன அந்த விஐபி.யா?"

"ஆமா... நட..."

## 20

விவேக்கும் விஷ்ணுவும் பாவாடைசாமியின் வீட்டைக் கண்டுபிடித்து கதவைத் தட்டினார்கள். ஒரு பெண்ணின் முகம் எட்டிப் பார்த்தது.

"யார் வேணுங்க?"

"பாவாடைசாமி."

"நீங்க."

"வெளியூரு. மாந்தரீகம் பார்க்கணும்."

"உள்ளார வந்து உட்காருங்க."

கட்டிலில் படுத்திருந்த பாவாடைசாமி எழுந்து உட்கார்ந்தான்.

"யாரு புள்ளே?"



"மாந்தரீகம் பார்க்கணுமாம்" சொல்லிவிட்டு உள்ளே போய்விட, பாவாடைசாமி எழுந்து வந்தான்.

"எந்த ஊரு?"

"நீ போகப் போகிற ஊருதான். வேலூர்..." விவேக் சொல்லிக்கொண்டே துப்பாக்கியை எடுத்து பாவாடைசாமியின் வலது காதுக்குள் சொருகினான்.

"யார் நீங்க?"

"போலீஸ்."

"அய்யா நான் ஒரு தப்பும் பண்ணலைங்களே?"

"ஒரு தப்பு பண்ணலை. ரெண்டு தப்பு பண்ணியிருக்கே!"

"என்னய்யா சொல்றீங்க?"

"மயானத்துல உனக்கு வெட்டியான் வேலைதானே?"

"ஆமாங்கய்யா."

"மயானத்துக்கு பிணங்கள் வந்தா அதை புதைக்கிற வேலை மட்டும்தான் உன்னோடது?"

"ஆமாங்கய்யா...!"

"புதைச்ச பிணங்களை தோண்டி எடுக்கலாமா?"

"எடுக்கக்கூடாதுங்க."

"ஆனா நீ எடுத்திருக்கே. போன பௌர்ணமிக்கு ஒரு பெண்ணோட பிணத்தையும், இந்த பௌர்ணமிக்கு ஒரு பெண்ணோட பிணத்தையும் தோண்டி எடுத்திருக்கே... பிணங்களோட தலையை வெட்டிட்டு அதை ஒரு கோணிப் பையில் போட்டு சுவர்ணா ஹோட்டல் இருக்கிற ஏரியாவுக்கு கொண்டு வந்து 44ம் நம்பர் மரத்துக்கு கீழே போட்டுட்டு போயிருக்கே..."

"அய்யா...."

"இயற்கையாய் செத்துப்போன பெண்கள் கொலை செய்யப்பட்ட மாதிரி தெரியணும் கிறதுக்காக அவங்க ப்ளட் க்ரூப் ரத்தத்தை கோணிப் பையில் தடவியும் விட்டிருக்கே..."

"அய்யா..."

"ஏற்கெனவே இறந்துபோன உடலில் இருக்கும் ரத்தத்துக்கும் புதுசா அதே ப்ளட் க்ரூப்பைச் சேர்ந்த ரத்தத்துக்கும் வித்தியாசம் இருக்கும்னு உனக்கு தெரியலை... உனக்குப் பின்னாலிருந்து இயக்கியவங்களுக்கும் தெரியலை. ரெண்டு பெண்களும் கொலை செய்யப்பட்டவங்க கிடையாது. அவங்க நோய்வாய்ப்பட்டு இறந்தவங்க என்கின்ற உண்மை எனக்கு தெரிஞ்சதுமே யாருக்கும் தெரியாம ஒரு ரகசிய விசாரணையில் இறங்கினேன். பக்கத்துல ஏதாவது மயானம் இருக்கான்னு பார்த்தேன். இருந்தது. வெட்டியான் நீதான்னு சொன்னாங்க. இனிமே நீ பொய் சொல்ல முடியாது. தப்பிக்க முடியாது. உனக்கு



பின்னால இருக்கிற ஆட்கள் யாரு?"

விவேக்கின் துப்பாக்கி பாவாடைசாமியின் காதைக் குடைந்தது.

## 21

முதலமைச்சர் சத்தியநாராயணன் தனக்கு முன்னால் கைகட்டி நின்றிருந்த செல்வ கிருஷ்ணனை கோபமாய் பார்த்தார்.

"யோவ் நீ என்னய்யா சொல்றே?"

"உண்மையைத்தான் சொல்லிட்டிருக்கேன்யா... செவன் ஸ்டார் அந்தஸ்துள்ள நம்ம சுவர்ணா இண்டர்நேஷனல் ஹோட்டலை இழுத்து மூட வேண்டியிருக்கும். கடந்த ஒரு வார காலமா ஹோட்டலில் ஒரு கஸ்டமர்கூட இல்லை. போன பௌர்ணமி அன்னிக்கு ரெண்டாவது டெட்பாடி கிடைச்ச பிறகு ஹோட்டலில் இருந்த மொத்த பேரும் காலி பண்ணிட்டு போயிட்டாங்க. இண்டர்நேஷனல் ஹோட்டல்ஸ் லிஸ்டில் நம்ம ஹோட்டலுக்கு ப்ளாக் மார்க் கொடுத்திருக்காங்க. ஒரு அஞ்சு வருசத்துக்கு எந்த வெளிநாட்டுக்காரனும் ஹோட்டல்ல வந்து தங்கமாட்டான்."

"யோவ்! செல்வகிருஷ்ணன்! ஹோட்டலுக்கு உண்மையான ஓனர்ஸ் நானும் மங்கையர்க்கரசியும்தான்னு உனக்கு

ஒருத்தனுக்கு மட்டும்தான் தெரியும். நீ ஒரு பினாமின்னு எங்களுக்கு மட்டும்தான் தெரியும். அந்த ஹோட்டலை கட்டறதுக்காக கோடி கோடியா பணத்தை கொட்டியிருக்கோம். ஹோட்டல் கட்டி ஒரு வருசம் கூட ஆகலை. அதுக்குள்ள மூடுவிழாவா? முடியாது! ஹோட்டலை வெற்றிகரமா நடத்தியே ஆகணும். அதுக்கு என்ன பண்ணணுமோ அதை போய் பண்ணு!"

"கஸ்டமர்ஸ் யாரும் வராதபோது எப்படிங்கய்யா ஹோட்டலை நடத்த முடியும்? ஹோட்டல்ல வேலை பார்த்திட்டிருந்த பாதி பேர் வேற ஹோட்டல்ஸுக்கு போயிட்டாங்க. கேடரிங் டிபார்ட்மெண்ட்ல இப்போ யாரும் கிடையாது."

"இப்ப என்ன பண்ணலாம்கிறே?"

"ஹோட்டலை ஒரு மாசத்துக்காவது மூடி வைக்கணும்யா! கஸ்டமர்ஸ் வராம ஹோட்டலை நடத்தினால் நிர்வாகச் செலவுகள் நம்மை சாப்பிட்டு போயிடும்... இல்லேன்னா..."

" சொல்லு..."

"ஹோட்டலை வந்த விலைக்கு வித்துட வேண்டியதுதான்."

"என்னமோ பண்ணித் தொலை!"



# ௨௨

மதுரா டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தாள்.

"டாக்டர் அம்மாவுக்கு இப்போ எப்படியிருக்கு?"

"ஸேம் கண்டிஷன்! சுயநினைவு வரும்போது வாய்விட்டு அழறாங்க. அழுது முடிஞ்சதும் வெறிச்ச பார்வை. அம்மாவுக்கு குணமாக நாளாகும்னு நினைக்கிறேன்."

"எந்த ஆபத்தும் இல்லையே?"

"இல்லைம்மா."

"இப்போ ஹாஸ்பிடலுக்கு வரணுமா டாக்டர்?"

"ஏதாவது பிரச்னைன்னா நானே போன் பண்றேன்."

"தேங்க்யூ டாக்டர்."

ரிசீவரை வைத்தபோது, காலிங்பெல் கூப்பிட்டது.

வெளியே, விவேக், விஷ்ணு

"குட்மார்னிங் மதுரா. உங்ககிட்ட ஒரு பத்து நிமிசம் பேசணும். அப்பாய்ண்ட்மெண்ட் கிடைக்குமா?"

விவேக் கேட்க மதுரா முறைத்தாள்.

"என்ன பேசணும்? நான் கடத்தப்பட்டது சம்பந்தமான என்கொய்ரிதானே?"

"இது கொஞ்சம் பர்சனல்."

"பர்சனல்..."

"எஸ்."

"என்ன சொல்லுங்க?"

விவேக் விஷ்ணுவை பார்த்தான். "சொல்லுடா!"

"மிஸ் மதுரா! வெளிநாட்டில் நீங்க கடத்தப்பட்டதா சொன்னது பொய். ஆக்சிடெண்ட் நடந்ததா சொன்னது பொய். எல்லாமே செட்டப். நான் சொன்னது உண்மையா... பொய்யா?"

மதுரா முகம் மாறினாள். விஷ்ணு தொடர்ந்தான்.

"ஹரிபிரசாத்தை உங்களுக்கு பிடிக்கலை. அவங்க அப்பாவுக்கு உங்கள் கற்பை பற்றி நீங்கள் லெட்டர் எழுதி வேண்டுமென்றே பிரச்னையை பெரிதாக்கி அவர்களை அவமரியாதையா பேசி கல்யாணத்தை நிறுத்தியதும் நீங்கதான். நான் சொன்னது உண்மையா பொய்யா?"

மதுராவின் கண்களில் கலக்கம்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படி?"

"ஜெயச்சந்திரன்!"

"ஜெயச்சந்திரன்?"



"ம்... உங்கள் காதலன் ஜெயச்சந்திரன் கொடுத்த வாக்குமூலம்... அவர் இப்போ போலீஸ் லாக்கப்பில் வெட்டியான் பாவாடைசாமியோட ஒன்றாக வாசம்..."

மதுரா அணுஅணுவாக திகைத்துக் கொண்டிருக்க விவேக் தொடர்ந்தான்.

"எல்லா விஷயங்களும் வெட்டவெளிக்கு வந்து குற்றாலக் குளியல் நடத்திக்கிட்டு இருக்கு. ஜெயச்சந்திரன் எல்லாத்தையும் சொல்லிட்டார். முதலமைச்சர் சத்தியநாராயணனுக்கும் உங்க அம்மா மங்கையர்க்கரசிக்கும் இருந்த இல்லீகல் காண்டாக்ட் உங்களுக்கு பிடிக்கலை. பெத்த தாயை உங்களால கண்டிக்க முடியலை. மௌனமான முறையில் டார்ச்சர் பண்ணி தண்டிக்க விரும்பினீங்க. அவங்க பினாமி பேரில் கட்டின ஹோட்டலுக்கு கெட்ட பெயரை உண்டாக்கி ஹோட்டலுக்கு எந்த கஸ்டமரும் வராதபடி செய்ய நினைச்சீங்க... அதுக்காக காதலன் ஜெயச்சந்திரன் உதவியோடு பாவாடைசாமியின் கைங்கர்யத்தில் பிணங்களைத் தோண்டி எடுத்து கொலைகள் நடக்கிற மாதிரி செட்டப் பண்ணினீங்க. எல்லாத்தையும் ஒழுங்காத்தான் பண்ணீங்க. ஆனால்..."

விவேக் நிறுத்த விஷ்ணு குறுக்கிட்டான்.

"ஆனா எங்க பாஸுக்கு பூசணிக்காய் கண்ணுக்குத் தெரியாது... கடுகுதான் கண்ணுக்குத்

தெரியும்கிற விசயம் உங்களுக்குத் தெரியாதுன்னு இப்பத்தான் எனக்குத் தெரியும்."

"படோ அபிஷ்ட்டு" என்றான் விவேக்.

(முற்றும்)


## திகில் & திரில்

மலர்: 3 இதழ்: 8

வெளியிடுபவர் - ஆசிரியர் :

எம்.எஸ்.முருகன்

**அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்**

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி நகர்,

நந்தனம், சென்னை - 600 035.

போன். 044 - 2436 1734



கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.



'Thikil & Thril' Novel Monthly
Owner, Publisher & Editor M.S. Murugan,
Published at:
New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,
Nandanam, Chennai - 600 035. Phone : 98405 14529